22nd JULY 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 40 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com

## முன்னாள் நிதியமைச்சர் முஸ்தபாவின் நூற்றாண்டு நிகழ்வு

**ஜனாதிபதி பிரதம அதிதி!**



இலங்கையின் முதலாவது முஸ்லிம் நிதி அமைச்சரும் நிந்தவூர் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்த எம்.எம். முஸ்தபாவின் நூறாவது பிறந்த தினம் இடம்பெறுவதையிட்டு எதிர்வரும்

02ம் பக்கம்பார்க்க...

## நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க

# என்னோடு இணையுங்கள்

**சஜித், அநுரவுக்கு ஜனாதிபதி அழைப்பு**



அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரை இப்பயணத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்தார்.

“ஒன்றாக வெல்வோம் – நாம் கம்பஹா” என்ற தொனிப்பொருளில் நேற்று (21) கடவத்தை பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்ற

02ம் பக்கம்பார்க்க...

## தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் முடிவை அறிவிக்காத ரணில்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமென நேற்று கடவத்தை நகரில் இடம்பெற்ற கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதற்கு

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாஸா எரிப்பு முட்டாள்களின் தீர்மானம்

**திஹாரிய அல் அஸ்ஹர் நிகழ்வில் சஜித் பிரேமதாச**

உலகில் பல நாடுகள் ஸ்மார்ட் நாடுகளாக மாறி அபிவிருத்தியை எட்டியுள்ளன. ஸ்மார்ட் நாடு ஸ்மார்ட் கல்வியைக் கொண்டிருக்க வேண்டும். ஸ்மார்ட் கல்வி மூலம் பாரிய மனித மூலதனம் உருவாக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கல்வியறிவு இல்லாத ஒரு முட்டாள் கூட்டம், முஸ்லிம் சமூகத்தின் கலாச்சார மற்றும் மத உரிமைகளை தடுத்து தகனமா அடக்கமா என்ற விவகாரத்தில் முட்டாள்கள் போல் நடந்து கொண்டனர்.

05ம் பக்கம்பார்க்க...

## இட ஒதுக்கீடு இரத்து உயர் நீதிமன்றம் அதிரடி

**கைவிடப்படுமா பங்களாதேஷ் போராட்டம்?**

பங்களாதேஷ் மாணவர்களின் இட ஒதுக்கீடு போராட்டம்

03ம் பக்கம்பார்க்க...

## 22 வது அரசியல் திருத்தத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு பாதிப்பில்லை



அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த்

02ம் பக்கம்பார்க்க...

## திருத்தம் வேண்டாம்

**பெப்ரல் வேண்டுகோள்**

சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் வகையில் எந்தவொரு திருத்தத்தையும் இந்த வேளையில் கொண்டு வர வேண்டாம்

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில் வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

ரூ. 2,085/- ரூ.100,000க்கு வாடகை*

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## நாட்டின்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டம் மற்றும் முன்நோக்கிச் செல்லும் வழிகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்தில், கம்பஹா மாவட்டத்தின் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்த மக்கள், ஜனாதிபதியை அமோகமாக வரவேற்றனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற முன்மொழிவை கம்பஹா மாவட்ட மக்கள் சார்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்தார்.

அப்போது, மேடையில் இருந்த பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் உட்பட 250 முன்னாள் உள்ளூராட்சி உறுப்பினர்களும், கூட்டத்தில் பங்கேற்ற 15,000இற்கும் மேற்பட்டோர் கைகளை உயர்த்தி ஏகமனதாக அந்த மொன்மொழிவு நிறைவேற்றப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில், 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் திகதி பொருளாதாரம் மற்றும் அரசாங்கம் இல்லாத நாட்டைத்தான் பொறுப்பேற்றேன் என்று ஜனாதிபதி தெரிவித்தார். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சரியாக நிறைவேற்றியதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, தான் எப்போதும் தனக்காக அன்றி, நாட்டுக்காகவே செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

"மக்கள் எனக்கு வழங்கிய அடிப்படையான பொறுப்பை நான் நிறைவேற்றியுள்ளேன். பொருளாதாரமும் அரசாங்கமும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றேன். பதில் ஜனாதிபதியாக பதவியேற்கக் கூட அரசாங்க அலுவலகம் ஒன்று இருக்கவில்லை. எனக்கு கட்சியும் இருக்கவில்லை. எனது கட்சியில் நான் மட்டுமே பாராளுமன்றத்தில் இருந்தேன். அதன்படி ஐக்கிய தேசிய கட்சியினர் என்று நம்பி ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒத்துழைப்பு கேட்டேன் ஒத்துழைக்கவில்லை டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விரும்பமில்லாத காரணத்தினால், அவர்களும் எனக்கு ஆதரவளிக்க முன்வரவில்லை. பின்னர் பொதுஜன பெரமுனவின் தலைவர் ஜீ.எல் பீரிஸிடம் ஒத்துழைப்பு கேட்டேன். அவர் என்னை சந்திக்க கூட தயாராக இருக்கவில்லை. நான் பேசினேன் அவர் என்னோடு பேசக்கூட தயாராக இருக்கவில்லை. பின்னர் மஹிந்த ராஜகக்ஷவைச் சந்தித்து பேசினேன். அவர் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தார்.

அவ்வாறு ஆரம்பித்த அரசாங்கத்தில் நான் ஜனாதிபதியாக இருக்க எனக்கு ஒரு இடமிருக்கவில்லை. ஜனாதிபதி மாளிகையில் ஒன்றுகூடியிருந்த மக்கள் நீச்சல் தடாகத்தில் நீராடிக்கொண்டிருந்தனர். எனது வீடு எரிக்கப்பட்டிருந்தது. அலுவலகமும் முற்றுகையிடப்பட்டிருந்தது. பிரதமர் அலுவலகம் மட்டும் எஞ்சியிருந்தால் அதன் மேல் மாடியில் நானும், கீழ் மாடியில் பிரதமர் தினேஸ் குணவர்தனவும் பணிகளை ஆரம்பித்தோம் – என்றார்.




## முன்னாள்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வெள்ளிக்கிழமை பண்டார நாயக்க மற்றும் இலங்கை மன்றக் கல்லூரியில் நினைவு தின வைபவம் ஒன்று நடைபெற உள்ளது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்து கொள்ளும் இந்த வைபவத்தில் எம்.எம். முஸ்தபா பற்றிய நினைவு நூலொன்றும், நினைவு முத்திரையொன்றும் வெளியிடப்பட உள்ளது நாட்டின் சகல அரசியல் கட்சி பிரமுகர்களும் இந்த கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வெள்ளியன்று மாலை 4:30 மணிக்கு இக்கூட்டம் நடைபெறும். இலங்கையில் நிதி அமைச்சராக இரு முஸ்லிம்களே பதிவி வகித்தது உண்டு. ஒருவர் எம். எம். முஸ்தபா இரண்டாமவர் எம்.எச். எம். நய்னா மரிக்கார். ஜனநாயக கோவையின் இடைக்கால அரசாங்கத்திலே எம். எம். முஸ்தபா அவர்கள் 1960 இல் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அவர் நிந்தவூர் தொகுதியை நீண்ட காலம்... குறிப்பிடத்தக்கது.

## தீர்மானம்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

எந்த வித பதிலும் வழங்காது ஜனாதிபதி ரணில் மேடையில் இருந்து இறங்கிச் சென்று விட்டார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்த யோசனைக்கூ கூட்டத்திலிருந்த அனைவரும் ஒருங்கிணைந்து ஆதரவு வழங்கினர்.

எனினும் முடிவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கட்சி ஆதரவாளர்கள் இதனால் ஏமாற்றமடைந்துள்ளனர்.

## திருத்தம்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

என ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து பத்து பில்லியன் ரூபாவை செலவிட்டு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தினால் அது நிதிக் குற்றமாகும் என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பணமில்லை எனக் கூறி ஒத்திவைக்கப்பட்டுள்ள வேளையில் சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக்கும் திருத்தங்களை அரசாங்கம் முன்வைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தவிர்த்துள்ள அரசாங்கம், தனது சொந்த அதிகாரத்தின் பிழைப்புக்காக எவ்வாறு செயற்படுகின்றது என்பதை இது காட்டுவதாகவும் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

## 22வது...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் நிகழ்ச்சி நிரலில் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணை உள்ளடக்கப்படவில்லை என, அவைத்தலைவரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணை, ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், தற்போதைக்கு வராது என நினைக்கிறேன். அடுத்த அமர்விற்கான நிகழ்ச்சி நிரலை, நேற்று (20) தயாரித்தேன். அது அதில் இல்லை.

இந்தத் திருத்தம் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும், அதனால் தேர்தல் பாதிக்கப்படமாட்டாது. தேர்தல் பாதிக்கப்படும் என்பது, பல்வேறு குழுக்கள் மற்றும் படிப்பறிவில்லாதவர்களால் வெளியிடப்படும் கருத்தாகும் என்றார்.

(ஐ.ஏ. காதிர் கான்)



### இட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமடைந்ததையடுத்து அந் நாட்டு உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது. மாணவர்களின் போராட்டத்துக்கு காரணமாக அமைந்த விடுதலை போராட்ட வாரிசுகளுக்கான 30 வீத இட ஒதுக்கீட்டை உடனடியாக இரத்து செய்வதென அந் நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இத் தீர்ப்பு வழங்கப்பட்டதை அடுத்து மிகப் பெரும் கலவரமாக வெடித்துள்ள மாணவர் போராட்டம் கைவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷ் அரசு வேலைவாய்ப்புகளில் விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட 30மூ இடஒதுக்கீட்டை இரத்து செய்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கான வேலை ஒதுக்கீட்டை 30 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்குமாறு அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பங்களாதேஷ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

30% இடஒதுக்கீடு குறித்த வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு வரவிருந்த நிலையில், வங்கதேசத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் போராட்டம் தீவிரமடைந்ததால் இன்றைக்கே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

முன்னதாக, தீர்ப்பு வழங்கப்பட்ட உயர் நீதிமன்ற வாயிலுக்கு வெளியே இராணுவ தாங்கி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், தலைநகர் டாக்கா முழுவதும் பங்களாதேஷ் குழுக்கள் நிறுத்தப்பட்டன. இதற்கிடையே, வங்கதேச வன்முறைப் போராட்டத்தில் 151 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பங்களாதேஷ் கலவரம்: அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு தொடர்பாக சமீபத்தில் வங்கதேச உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஓர் உத்தரவு மாணவர்களைக் கிளர்ந்தெழச் செய்து வீதிகளில் இறங்கிப் போராடத் தூ ண்டியுள்ளது. கடந்த 1971-ம் ஆண்டு வங்கதேசத்தின் விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. இடையில் ரத்துச் செய்யப்பட்டிருந்த இந்த இடஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும் என்று வங்கதேச உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜுலை 1-ம் திகதி முதல் அங்கு போராட்டம் தொடங்கியது.

இதனால், வங்கதேசத்தில் கடந்த சில நாட்களாக கொந்தளிப்பான சூழல் நிலவி வருகிறது. அங்கு மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் தொடர்ந்து மோதல் நடந்து வருவதால் நாடு முழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இருதரப்புக்கும் இடையிலான மோதல் நீடித்து வரும் நிலையில், இந்த வன்முறைச் சம்பவங்களுக்கு இதுவரை 130 பேர் உயிரிழந்தனர் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். அரசின் அதிகாரபூர்வ தொலைக்காட்சி வளாகம் சேதப்படுத்தப்பட்டுள்ளது. அரசு மற்றும் செய்தித் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு தடைபட்டன.

கலவரத்தைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் மொபைல் இணைய சேவைகள் தடை செய்யப்பட்டுள்ளது. பாடசாலை , கல்லூரிகள் மறு உத்தரவு வரும் வரையில் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. பிரதமர் அலுவலகம், காவல் துறையின் இணையதளங்கள் ஹேக் செய்யப்பட்டுள்ளன. அதன் முகப்பு பக்கங்களில் 'இனி இது போராட்டம் இல்லை, இப்போது இது போர்' என்ற வாசகங்கள் ஒளிர்கின்றன. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர வங்கதேசத்தின் ஆளுங்கட்சி நாடு முழுவதும் வெள்ளிக்கிழமை (ஜுலை 19) முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தது. அமைதியை நிலைநாட்ட இராணுவத்துக்கு அரசு அழைப்பு விடுத்தது.

இந்நிலையில், வங்கதேச அரசு வேலைவாய்ப்புகளில் விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட 30மூ இடஒதுக்கீட்டை ரத்து செய்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மணமகள் தேவை
அமெரிக்க பிரஜாவுரிமையுடன், அமெரிக்காவில் தொழில்புரிந்து வசித்துவரும் திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய விவாகரத்து பெற்ற, பிள்ளைகளற்ற ஒருவருக்கு முஸ்லிம் மணமகள் (பிள்ளைகளற்ற) ஒருவர் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்துவிட்டு மணமகளை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லவுள்ளார்.
மேலதிக தகவல்களுக்கு:
070 239 7210 எனும் வட்ஸ்அப் இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JULY 22 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஜனாதிபதித் தேர்தல்...; 22 ஆவது யாப்பு திருத்தம்! முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு!!

ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை வெளியிடும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சில தினங்களுக்கு முன் கிடைத்துள்ளது. இப்போது தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு எப்போது வெளியிடும் என்பதை நாட்டு மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் இந்த ஆர்வமான எதிர்பார்ப்பிற்குள் ஜனாதிபதி 22வது அரசியல் யாப்புச் சட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளார். இச்சட்டம் மூலத்தை தேர்தலுக்குப் பின்பே விவாதிக்க வேண்டும் எனக் கூறி அரசாங்கத்தின் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாசராஜபக்ச சட்டமூலத்தை வர்த்தமானில் வெளியிடுவதனை ஒத்தி போடுமாறு தனது செயலாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார். தமது அமைச்சரின் பணிப்புரையை துட்டுக்கும் மதிக்காத ஜனாதிபதி இருபத்திரண்டாவது அரசியல் யாப்பின் திருத்த சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார். எந்த ஒரு சட்டமூலத்தையும் நாட்டின் அதிகார அமைப்பு தலைவர் என்ற வகையில் வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார். எந்த ஒரு சட்டமூலத்தையும் நாட்டின் அதிகாரமிக்க தலைவர் என்ற வகையில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. 22 ஆவது அரசியலமைப்புச் சட்டம் ஒன்று இன்று உள்ள நிலையில் நாட்டிற்குத் தேவையற்றது நாட்டினை சிக்கலுக்கு உள்ளாக்கும். உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தலில் நடத்தாமல் இருப்பதற்கான உபாயவழியே இந்த 22 ஆவது திருத்தச் சட்ட மூலம் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

ஒக்டோபர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலினை நடத்துவதற்கு தடையாகவே 22 ஆவது திருத்த சட்டம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது என்றும் வாதிடுகின்றார்கள். அரசாங்கத்தின் தரப்பில் தேர்தல் நடைபெறும், தேர்தலுக்கு தடையாக இருக்காது என்று சொல்கிறார்கள். 22 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இந்த தருணத்தில் தேவைப்படுவது யாருக்கு. இது குறித்து அமைச்சர்களிடம் கேட்டால் அவர்களிடம் இதற்கு பதில் இல்லை இந் நாட்களில் இடம் பெற்று வரும் பதவிக்காலம் 5 வருடமா அல்லது 6 வருடமா என்ற விவாதத்திற்கு அமைச்சரவையின் பதில் 5 வருடம் என்று சொல்வதற்கே 22 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் என்று சொல்கிறார்கள்

ஐந்து வருடமா ஆறு வருடமா என்பதற்கு உயர் நீதிமன்றம் மூன்று சந்தர்ப்பங்களில் தெளிவான தீர்ப்பை வழங்கி இருக்கின்றது. ஐந்து ஆண்டுகள் என்ற விவாதமே இருக்கவில்லை.

மைத்திரிபால சிறிசேன ஐந்து வருடங்கள் பதவியில் இருந்தார். கோதாபய ராஜபக்ஷ ஐந்து வருட காலத்திற்கே தெரிவானார். அப்படி இருக்க அடுத்து பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடமே என்பதனை அறியாதிருப்பவர் யார். எனவே யாப்புத் திருத்தம் என்று கூறிக்கொண்டு நாட்டைக் குழப்பினால் பாரிய பிரச்சினை ஏற்படும் என்பது தவிர்க்க முடியாதது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் தேர்தலை எப்படியாவது ஒத்திப் போட வேண்டும் என சில சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. ஜனநாயகம் பற்றி பேசிய தலைவர்கள் கூட இதன் பின்னணியில் இருப்பதே கவலைக்குரியது தமது சுயலாபத்திற்காக அவ்வாறு நடப்பதனை எவரும் நியாயப்படுத்த மாட்டார்கள் உரிய நேரத்தில் தேர்தலை நடத்தி மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பது பொறுப்பாளர்களின் கடமையாகும்.

திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டால் முஸ்லிம் தரப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்று கேள்வி சமூகத்தின் மத்தியில் நிலவுகின்றது முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் கட்சிகள் சமூக நன்மைகளை விட தமது தனிப்பட்ட நன்மைகள் இலக்காகக் கொண்டு செயல்படுவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் உறுப்பினர்கள் இவ்வளவு காலமும் தாம் இருந்த கட்சிகளில் இருந்து ஒதுங்கி அரசு வழங்கும் சில சலுகைகளுக்காக தமது கொள்கைகளை மாற்றி செயல்பட முற்பட்டுள்ளார்கள் முஸ்லிம்கள் இதுபற்றி பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் சந்தர்ப்பவாதிகள் என்ற பெயரை உறுதிப்படுத்துவது போன்ற சில முஸ்லிம் அரசியல் தலைவர்கள் செயற்பட்டுள்ளார்கள். இவர்கள் எவரும் சமூகத்தின் பிரதான தேவையை முன்வைத்து செயல்படுவதாக தெரியவில்லை சமூகம் எதிர் நோக்கும் கல்வி, காணி மற்றும் பிரதான பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைப்பதற்கு தமது பேரம் பேசும் சக்தியை பயன்படுத்த வேண்டும் முஸ்லிம் சிவில் சமூக கட்டமைப்புடன் இணைந்து முஸ்லிம்களின் தேவைகளை இனம் கண்டு அவற்றிற்கு தீர்வினை பெற்றுத் தரக்கூடிய அமைச்சரவைக்கு சமூகத்தின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வழிகாட்ட வேண்டும் சமூகத்தின் வாக்கினை அடகு வைக்காது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முஸ்லிம்களின் தேவைகளை கவனித்து தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கு முஸ்லிம் அரசியல் கட்சிகளும் மற்றும் முஸ்லிம் தலைமைத்துவமும் செயல்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி கூற விரும்புகின்றோம்.

# நாவிதன்வெளியில் "சாதனையாளர்களை கௌரவிக்கும் முப்பெரும் விழா"




அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேசத்தின் "சாதனையாளர்களை கௌரவிக்கும் முப்பெரும் விழா" நேற்று (20) மாலை அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டார். இதன் போது நாவிதன்வெளி பிரதேசத்தில் 2023ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு கௌரவம் வழங்கிவைக்கப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார திட்டங்களும் வழங்கிவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஸ்லி முஸ்தபாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அமைப்பாளரகள், செயற்குழு உறுப்பினர்கள், உயர்பீட உறுப்பினர்கள், பிரமுகர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# திருமண வாழ்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான இலவச கற்கைநெறி பூர்த்தி நிகழ்வு




(இர்ஸாத் இமாமுதீன்)

லைப்பொண்ட் சமூக சேவை நிறுவனம் நடாத்திய திருமண வாழ்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கான இலவச கற்கைநெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் சனிக்கிழமை (21) மாவனல்லை உயன்வத்தை மஸ்ஜிதுன் நூர் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை அஹதிய்யா சம்மேளனத்தின் தலைவரும் லைப்பொண்ட் நிறுவனத்தின் பணிப்பாளருமாகிய அல்ஹாஜ் எம்.ஆர்.எம். ஸரூக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லக்சிரி நிறுவனத்தின் பணிப்பாளர் அல்ஹாஜ் ஷஹீமுல்லாஹ் இக்பால் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

லைப்பொண்ட் நிறுவனத்தின் வளவாளர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் இக்கற்கை நெறியை பூர்த்தி செய்து வெற்றிகரமாக சித்தியடைந்த மாணவிகள் குறித்து மதிப்பீட்டுரை நிகழ்த்தினார்.

அதேவேளை, லைப்பொண்ட் நிறுவனத்தின் இயக்குனர் அஷ்ஷெய்க் முஹம்மத் பகீஹுத்தீன் லைபொண்ட் நிறுவனம் பற்றிய அறிமுக உரை நிகழதினார்.

இந்நிகழ்வில் உயன்வத்த பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத்தலைவர்கள், பேஷ் இமாம்கள் மற்றும் கல்வியலாளர்கள், பிரமுகர்கள் உட்பட சித்தியடைந்த மாணவிகள்,பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



## ஜனாஸா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோவிட் மரணம் ஏற்பட்டால் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியிருந்தது. கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் மத உரிமைகளை பறிக்கும் இனவாத நோக்கத்துடன் ஜனாஸாக்களை எரித்தனர். உலக சுகாதார ஸ்தாபனத்தை பார்க்கிலும் புத்திசாலிகள் என்ற மமதையில் செயற்பட்டனர். இது அறிவில்லாத செயற்பாடாகும். ஜனாஸா எரிப்பு என்பது முட்டாள்களின் முட்டாள்தனமான தீர்மானமாகும். எமது நாட்டின் ஆட்சியாளர்கள் முஸ்லிம் மக்களை ஒடுக்கி, இனவாதத்தையும் மதவாதத்தையும் தலைதூக்கி செயற்பட அனுமதித்து, முட்டாள்கள் போல் தீர்மானங்களை எடுத்து, முட்டாள்தனமான நடந்து கொண்டனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, எமது நாட்டில் தரமான சிறந்த கல்விக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கல்வியின் மூலம் இனவாதம், மதவாதம், தீவிரவாதம் ஒழிக்கப்படும். சிங்கள சமூகமோ, தமிழ் சமூகமோ, முஸ்லிம் சமூகமோ, பர்கர்களோ, தீவிரவாதப் போக்கை கடைப்பிடிப்பார்களானால் அதற்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். எல்லா சமூகத்தையும், எல்லா மதத்தையும், எல்லா இனத்தையும் மதிக்கும் நாகரிகம் மிக்க குடிமக்களை உருவாக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 340 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கம்பஹா, அத்தனகல்ல, திஹாரிய, அல்-அஸ்ஹர் மத்திய கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 19 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இஸ்லாமிய மக்களை, முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து எடுக்கப்பட்ட சகல விடயங்களுக்கும் சட்டம் மற்றும் நீதிமன்றத்தின் முன் பதில் அளிக்க வேண்டும். இனவாதத்திற்கும் மதவாதத்திற்கும் இங்கு இடமில்லை. இந்த பிரிவினைகளை சமூகத்தில் இருந்து அகற்ற வேண்டும். இனவாதம் என்பது விஷ கிருமியாகும். இந்த புற்றுநோயை சமூகத்திலிருந்து இல்லாமல் செய்ய வேண்டும். நாடு பட்டினி வாடிய போது, வரிசைகளில் இருந்த போது மத அடிப்படையில் பிரித்து பார்க்கவில்லை. அனைவரும் ஒன்றாக இருந்தோம். பட்டினி மத பார்த்து வருவதில்லை. எனவே வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்க இன, மத ஒற்றுமை அத்தியாவசியம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

நமது நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டுமானால், இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லறவு மிகவும் முக்கியமானதாகும். இதுவே தெளிந்த மனதின் பண்பாகும். கல்வியின் ஊடாகவே இந்த உயரிய மனப்பாங்கு உருவாகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

## பிரிந்து வாழும் யாழ் முஸ்லிம் சமூகம் வட்ஸப் குறூப்பில் ஒன்றாக பயணம்




யாழ்ப்பாண முஸ்லிம்கள் 1990 இல் வெளியேற்றப்பட்ட தையடுத்து புத்தளம், நீர்கொழும்பு, பாணந்துறை, தெஹிவளை, வெள்ளவத்தை, பலகத்துறை, யாழ்ப்பாணம் போன்ற பல ஊர்களில் பரந்து வாழ்கின்றனர்.

பிரிந்து வாழும் யாழ் முஸ்லிம்களை யாழ் முஸ்லிம் சமூக ஊடகம், வட்ஸப் குறுப் மூலமாக 1000 இற்கும் அதிகமான யாழ் முஸ்லிம்களை ஒன்றிணைத்து பயணிப்பது மிகவும் பிரயோசனமாகவிருக்கிறது.

யாழ் முஸ்லிம் சமூக ஊடக வற்ஸப் குறூப்பில் யாழ் முஸ்லிம்களின் கல்வி , விளையாட்டு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களும் மேலும் முக்கியமாக யாழ் முஸ்லிம்களின் ஜனாஸா அறிவித்தல்களை உடனடியாக அறிவிப்பதிலும் பெரும் பங்காற்றுகிறது.

மேலும் ஒவ்வொரு வருடமும் யாழ் முஸ்லிம்களை தேர்ந்தெடுத்து யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது வழங்கி கௌரவிக்கிறது.

யாழ் முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் இதனை நெறிப்படுத்துவதில் முன்னின்று உழைக்கிறார். மேலும் அவருக்கு எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், ஏ.சி. நஜூமுத்தீன் ஆகியோரை முறையே தலைவராகவும் உபதலைவராகவும் உள்ளடக்கிய முக்கியஸ்தர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவும் ஆலோசனைகள் தெரிவிப்பதில் முன்னின்று உழைக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர் றிபாஸ் சாரணர் சங்கத்தினரால் கௌரவிப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப தலைவராக அட்டாளைச்சேனையைச் சேர்ந்த எம்.எப்.றிபாஸ் (ஜேபி) தெரிவு செய்யப்பட்டுள்ளமையை பாராட்டி அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சரணிய சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

அகில இலங்கை சமாதான நீதவனாக செயற்பட்டு வரும் இவர் அம்பாறை மாவட்ட சமாதான நீதவான்கள் அமைப்பின் செயலாளராகவும் இன்னும் முக்கிய பல அமைப்புகளிலும் பல்வேறு பதவிகளை வகித்து வருகிறார்.

இலங்கையில் ஊடகத்துறையில் தடம் பதித்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்டு இலங்கையின் முக்கிய ஊடக அமைப்பாக செயல்பட்டு வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தில் இவர் தேசிய உப தலைவராக தெரிவு செய்யப்பட்டிருப்பது இவரது ஊடகத்துறையில் ஒரு மைல் கல்லாகும்.

கடந்த 2002 ஆம் ஆண்டு எழுத்துத் துறையில் கால் பதித்த எம்.எப். றிபாஸ் இலங்கையில் இயங்கி வரும் பல்வேறு தேசிய நாளிதழ்களில் பிராந்திய செய்தியாளராக பணிபுரிந்து வருகிறார். சிரேஷ்ட ஊடகவியலாளர்களுடனும், பத்திரிகை துறை சார் உயர் அதிகாரிகளுடனும் தொடர்பை வைத்துள்ள இவர் நாடறிந்த முக்கிய சிரேஷ்ட ஊடகவியலாளராவார்.

சாரணியத்துறையில் இவர் ஆற்றிய சேவைகளுக்காக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மீடியா போரத்தின் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள இவர் ஊடகத்துறை சார்ந்து இன்னும் பல உயர் பதவிகள் பெறவும் ஊடகத்துறையில் மேலும் சிறந்து விளங்கவும், பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

## அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தௌபீக் ஆலீம்)

### துன்பம் தொடருமான தர்மம்

இவர்கள் தங்களுடைய பொருட்களை அல்லாஹ்வுடைய பாதையில் செலவுசெய்து (அப்பொருளை வாங்கியவனுக்கு) தாங்கள் அதை கொடுத்ததற்காக இகழ்ச்சியையும் துன்பத்தையும் (அதனோடு) சேர்க்கவில்லையோ அவர்களுக்குரிய கடலி அவர்களின் "ரப் " பிடம் அவர்களுக்குண்டு.மேலும் அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.

(தருமம் செய்து) அதை வாங்கியவனுக்கு துன்பம் தொடரும்படியாக செய்யும் தர்மத்தை விட (அன்புடன் கூறும்) இன்சொல்லும் மன்னிப்பும் மிக மேலாகும் அன்றி அல்லாஹ் தேவையற்றவனாகவும் பொறுமையாளனாகவும் இருக்கின்றான். (2:263)

### பலனை பாழாக்கி விடும் செயல்

நம்பிக்கையார்களே ! அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பாமல் மக்கள் காண்பதற்காக தன பொருளை செலவு செய்து (வீணாக்கு)பவனை போல நீங்கள் (மனமுவந்து வழங்கும்) உங்கள் தருமங்களை (பெற்றவனுக்கு முன்னும் பின்னும்) சொல்லிக் காண்பித்தாலும் துன்புறுத்துவதாலும் (அதன் பலனை) பாழாக்கி விடாதீர்கள் .இத்தகையவனின் உதாரணம் ஒரு வழுக்கைப்பாறையை ஒத்திருக்கிறது. அதன் மீது மண் படிந்தது. எனினும் ஒரு பெரும் மழை பொழிந்து அதை (க் கழுவி) பெரும் பாறையாக்கி விட்டது.

(இவ்வாறே அவன் செய்த தானத்தை அவனுடைய பெருமை அழித்து விடும்) ஆகவே அவர்கள் (தானம்) செய்ததில் இருந்து யாதொரு பலனையும் (மறுமையில்) அடைய மாட்டார்கள்.மேலும் அல்லாஹ் தன்னை நிராகரிக்கும் கூட்டத்திற்கு (அவர்களின் தீய செயல்களின் காரணமாக நேரான வழியில் செலுத்த மாட்டான். 2:264

### தர்மத்திற்கு உதாரணம்

எவர்கள் தங்களுடைய பொருளை அல்லாஹ்வுடைய திருப்பொருத்தத்தை நாடியும் தங்களுடைய உள்ளங்களில் (இறை நம்பிக்கையை) உறுதிப்படுத்துவதற்காகவும் செலவு செய்கிறார்களோ அவர்களுடைய (தர்மத்திற்கு) உதாரணம் உயர்ந்த பூமியாகிய மலைமீதுள்ள ஒரு தோட்டத்தை ஒத்திருக்கின்றது.

அதில் ஒரு பெரும் மழை பெய்தால் இரு மடங்கு பலனை தருகின்றது.பெரும் மழை பெய்யாவிட்டாலும் சிறு தூறல் அதற்கு போதுமானது அன்றி அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை உற்று நோக்கினவனாக இருக்கின்றான். 2 : 265

### ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெற

உங்களை யார் தான் (இதனை) விரும்புவார்.ஒருத்தருக்கு பேரீச்சை மற்றும் திராட்சையின் ஒரு தோப்பு இருக்கின்றது.அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றன.தொடர்ந்து அதிலிருந்து எல்லா வகை இனி வர்க்கங்களும் அவருக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றன.முதுமை அவரை அடைந்தது.(சம்பாதிக்க) இயலாத பல சிறு குழந்தைகளும் அவருக்கு இருக்கின்றனர். (இந்த நிலைமையில்) நெருப்புடன் கூடிய புயல் காற்று அடித்து அதனை எரித்து விட்டது (இத்தகைய நிலைமையை எவர் தான் விரும்புவார்.) நீங்கள் ஆராய்ந்து நல்லுணர்ச்சி பெறுவதற்காக அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு இவ்வாறு (உதாரணங்களை கொண்டு) தெளிவுபடுத்துகின்றன. 2: 266




# டொனால்ட் ட்ரம் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு...

# முடிவுகளை மாற்றும் அமெரிக்கா தேர்தல் களம்...!

எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அமெரிக்க அதிபர் தேர்தல் 2024: டொனால்ட் ட்ரம்ப் பெயர் “கன்ஃபார்ம்...” குடியரசு கட்சி வேட்பாளர் இவர் தான்!

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அறிவிப்பு குடியரசு கட்சி தரப்பில் இருந்து வெளியாகியுள்ளது. அமெரிக்க தேர்தலில் அதிபர் வேட்பாளர் யார் என்பது பற்றி அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் டொனால்ட் ட்ரம்ப் அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுகிறார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் 5ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி ஜனநாயக கட்சியும், குடியரசு கட்சியும் வேட்பாளர்கள் அறிவிப்பு, பிரச்சாரம் உள்ளிட்டவற்றில் மும்முரம் காட்டி வருகின்றன. முன்னதாக ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தொடர்ந்து 3வது முறையாக அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

குறிப்பாக கூட்டாட்சி அரசின் அதிகாரப் பரவலாக்கம், அமெரிக்காவிற்கு முதன்மை அளிக்கும் வகையிலான வெளியுறவுத்துறை கொள்கை, புலம்பெயர்வோருக்கு எதிரான கொள்கைகள் உள்ளிட்டவற்றை சொல்லலாம். இதை முன்னிறுத்தி பல்வேறு மாகாணங்களில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில் பென்சில்வேனியாவில் நடந்த துப்பாக்கிச்சூடு அமெரிக்க தேர்தல் களத்தை புரட்டி போட்டிருக்கிறது.

அமெரிக்க பிரதிநிதிகள் அவையின் முதன்மை விசாரணை அமைப்பான மேற்பார்வை குழு முன்பு வரும் 22-ஆம் தேதி ஆஜராகி இதுதொடர்பாக சாட்சியம் அளிக்குமாறு, ரகசிய சேவை முகமையின் இயக்குநர் கிம்பெர்லி சீட்டில்-க்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

20 வயதான தாமஸ் மேத்யூ க்ரூக்ஸ்-ஐ ரகசிய சேவை முகமை கொல்வதற்கு முன்னரே, அவரால் சுட முடிந்திருப்பது “ஆச்சர்யமாக” இருப்பதாக, உளவுத்துறை (குஊஜ) சிறப்பு முகவர் கெவின் ரோஜெக் தெரிவித்தார்.

அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் நிலையில், ட்ரம்ப் மீது தாக்குதல் நடத்தியவர் பற்றிய விவரங்களும் வெளியாகி வருகின்றன. தாமஸ் மேத்யூ க்ரூக்ஸ் என அறியப்படும் அந்த இளைஞர், பென்சில்வேனியாவில் உள்ள பேத்தல்பார்க் என்ற பகுதியை சேர்ந்தவர். அந்த ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 2022 ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்த அவர், கணக்கு மற்றும் அறிவியல் பாடங்களில் சிறந்து விளங்கியுள்ளார். இதற்காக அவர் 500 டாலர் பரிசுபெற்றுள்ளார். பள்ளியில் படித்தபோது அவர் மிகவும் அமைதியானவராக இருந்துள்ளார். பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, வீட்டின் அருகே, ஒரு நர்ஸிங் ஹோமில் உள்ள சமையல் கூடத்தில் பணியாற்றி வந்துள்ளார்.

இந்த படுகொலை முயற்சி தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணையில் உளவுத்துறை, ரகசிய சேவை முகமை, உள்துறை பாதுகாப்பு ஆகிய துறைகளும் ஈடுபட்டுள்ளன.

“முன்னாள் அதிபர் டிரம்ப் மீதான படுகொலை முயற்சி தொடர்பான பதில்களை அமெரிக்க மக்கள் கோருகின்றனர்,” என மேற்பார்வை குழு சமூக ஊடகத்தில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முன்னாள் அதிபர் கூட்டத்தை நோக்கி தன் முஷ்டியை உயர்த்தியபோது அவருடைய காதின் அருகே ரத்தம் வழிந்ததை காண முடிந்தது.

தன்னுடைய சமூக ஊடகப் பக்கமான ட்ரூத் சோஷியல் தளத்தில், “தனது வலது காதின் மேல் பகுதியில் தோட்டா ஒன்று துளைத்துச் சென்றதாக” பதிவிட்டுள்ளார்.

”உச்ச ஸ்துதியில் விசில் போன்ற சத்தமும் துப்பாக்கி சுடும் சத்தமும் கேட்டது. இதைத் தொடர்ந்து உடனடியாக தோட்டா ஒன்று என் வலது காதைக் கிழித்துச் சென்றதை உணர்ந்தேன்,” என்று டிரம்ப் அப்பதிவில் தெரிவித்துள்ளார்.

“அதிக ரத்தம் வெளியானதால், பின்னர்தான் என்ன நடக்கிறது என்பதை உணர்ந்தேன்.”

டிரம்ப் மீதான படுகொலை முயற்சியாக இதனை தாங்கள் கருதுவதாக கூறியுள்ள உளவுத்துறை, “துரிதமாக விசாரணை நடைபெற்று வருவதாக” தெரிவித்தது.

துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் சம்பவ இடத்திலேயே அமெரிக்க ரகசிய முகமையின் பாதுகாப்பு அதிகாரியால் கொல்லப்பட்டதாக, அந்த முகமையின் செய்தித்தொடர்பாளர் ஆண்டனி குக்லில்மி தெரிவித்தார்.

மேலும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட பார்வையாளரும் படுகாயமடைந்த இருவரும் ஆண்கள் எனவும் அவர் தெரிவித்தார். அவர்களின் விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை.

மேத்யூ க்ரூக்ஸ் “ஏ.ஆர் ரக துப்பாக்கி” மூலம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள கட்டடத்திலிருந்து சுட்டதாகவும், சட்ட அமலாக்க வட்டாரங்கள் சிபிஎஸ் ஊடகத்திடம் தெரிவித்துள்ளது.அந்த இளைஞர், பென்சில்வேனியாவில் உள்ள பேத்தல்பார்க் என்ற பகுதியை சேர்ந்தவர். அந்த ஊரில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 2022 ஆம் ஆண்டு பள்ளிப் படிப்பை முடித்த அவர், கணக்கு மற்றும் அறிவியல் பாடங்களில் சிறந்து விளங்கியுள்ளார்.

பள்ளியில் படித்தபோது அவர் மிகவும் அமைதியானவராக இருந்துள்ளார். பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, வீட்டின் அருகே, ஒரு நர்ஸிங் ஹோமில் உள்ள சமையல் கூடத்தில் பணியாற்றி வந்துள்ளார். 2021ஆம் ஆண்டில் ஊடுயுஜசுவுமுடீ ஸ்போர்ட்ஸ்மேன்ஸ் க்ளப்பில் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றுள்ளார். 171 மீட்டர் தொலைவில் உள்ள இலக்கை எளிதில் சுடும் திறன் படைத்தவராக இருந்துள்ளார்.

துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு ஒருநாள் முன்னதாக தாமஸ் மேத்யூ, பெத்தேல் பார்க் பகுதியில் உள்ள மைதானத்தில் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டு உள்ளார். துப்பாக்கிகளை விற்பனை செய்யும் கடையில் 50 குண்டுகள் மற்றும் உயரமான ஏணி ஒன்றையும் வாங்கியுள்ளார்.

ட்ரம்ப்பின் பரப்புரை நடந்த பட்லர் டவுனுக்கு, பேத்தல் பார்க்கிலிருந்து 70 கிலோ மீட்டர் பயணித்து வந்துள்ளார். ட்ரம்ப் பேசிய மேடையில் இருந்து சுமார் 400 அடி தொலைவில் உள்ள கட்டிடத்தின் மீது ஏணியின் உதவியுடன் ஏறிய தாமஸ் மேத்யூ, ஏ.ஆர்.15 ரக துப்பாக்கியால் ட்ரம்பை குறிவைத்து 8 முறை சுட்டுள்ளார்.



இதில் ட்ரம்ப் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினாலும், அவரது ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்தார். 2 பேர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாமஸ் மேத்யூ குடியரசு கட்சியின் உறுப்பினராக இருந்துள்ளார். அவருக்கு தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு இல்லை. அவர் மீது எந்தவொரு வழக்கும் நிலுவையில் இல்லை என்பது தெரியவந்துள்ளது. .

எதற்காக அவர் ட்ரம்பை கொலை செய்ய முயன்றார் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. இவரது குடும்பத்தினர், வகுப்புத்தோழர்கள், ஆசிரியர்கள், சக ஊழியர்கள் என யாருமே மேத்யூவின் மனநிலையை அறிந்திருக்கவில்லை. ட்ரம்ப் மீது துப்பாக்கியால் சுட வேண்டுமென திட்டம் தீட்டியதற்கு இதுவரை எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

தாமஸ் மேத்யூ துப்பாக்கியுடன் பிரச்சார கூட்டத்தில் நுழைந்தது எப்படி என பல்வேறு தரப்பிலும் கேள்விகள் எழுப்பப்பட்டன. அவர் பிரச்சார கூட்டம் நடைபெற்ற மைதானத்துக்குள் வரவில்லை. மைதானத்துக்கு வெளியே உள்ளகட்டிடத்தில் ஏறி, அங்கிருந்து தாக்குதல் நடத்தி உள்ளார். அதனால் பாதுகாப்புப் படையினரின் சோதனையில் சிக்கவில்லை.

அமைதியாக காணப்படும் அவர், மிகப்பெரிய தாக்குதலை நடத்தியிருப்பது மிகுந்த அதிர்ச்சி அளிப்பதாக பெத்தெல் பார்க் பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர். இதனிடையே ஹட்ரம்ப்பின் உயிருக்கு இரான் நாட்டால் அச்சுறுத்தல் இருப்பது குறித்து அமெரிக்க ரகசிய உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த பரபரப்பான சம்பவத்திற்குப் பின்பு துப்பாக்கி சூட்டின் மூலம் முகம் முழுக்க ரத்தத்துடன் டிரம்ப் மக்களிடம் கைகளை உயர்த்தி காட்டிய புகைப்படம் இணையத்தில் வரலாகியுள்ளது மட்டும் அல்லாமல் அமெரிக்க வரலாற்று முக்கிய சம்பவமாக இது அமைந்துள்ளது. இதன் மூலம் டொனால்டு டிரம்ப் மீதான வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக உள்ளது.

இந்த சம்பவத்திற்கு பிறகு டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்ற கணிப்புகள் காட்டுத்தீ போல பரவியுள்ளது. இதன் வாயிலாக நீண்ட காலத்திற்கு பின்பு கிரிப்டோகரன்சியின் பிட்காயின் 60,000 டாலருக்கு மேல் உயர்ந்துள்ளது. டொனால்ட் டிரம்ப் ஆரம்பம் முதல் கிரிப்டோகரன்சிக்கு ஆதரவு தெரிவித்து வரும் வேளையில், சனிக்கிழமை பென்சில்வேனியாவில் துப்பாக்கிச் சூடு சம்பவத்தின் மூலம் அவர் 2வது முறையாக ஆட்சியை பிடிப்பது கிட்டத்தட்ட உறுதியாகியுள்ள காரணத்தால் முதலீட்டாளர்கள் கிரிப்டோ மீது முதலீடு செய்ய துவங்கியுள்ளனர். இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் டொனால்டு டிரம்ப் வலது காதில் காயம் ஏற்பட்டது, ஆனாலும் தற்போது அவர் ”நன்றாக” இருப்பதாகவும், திங்கள்கிழமை மில்வாக்கியில் தொடங்கும் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டிற்குச் செல்ல தயாராகி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது..

இந்த சம்பவத்திற்கு உலக நாட்டுத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர். குறிப்பாக எதிர் வேட்பாளரும் அதிபருமான ஜோ பைடன், “எனக்கும் ட்ரம்புக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம் ஆனால் நாங்கள் எதிரிகள் இல்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன். நாம் அனைவரும் அமெரிக்கர்கள் என்றவகையில் ஒன்றுபட்டு நிற்பது அவசியம். தேர்தலை வாக்குகள் மூலமாகத் தான் எதிர்கொள்ள வேண்டுமே தவிர தோட்டாக்களால் அல்ல” எனத் தெரிவித்திருந்தார்.

ஒருபுறமிருக்க, மறுபுறம் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம், நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலின் போக்கையே மாற்றக்கூடும் எனவும் தேர்தல் பரப்புரையில் தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அரசியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். அதில் மேலும் சிலர், ”இது டொனால்டு ட்ரம்பின் திட்டமிட்ட நாடகமாகக்கூட இருக்கலாம்” எனவும் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதற்கிடையே, அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்புக்கு தேர்தல் நிதியாக ரூ.376 கோடியை டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் வழங்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வருகின்ற நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் நடுநிலை வகிக்கவுள்ளதாக முதலில் எலான் மஸ்க் தெரிவித்திருந்தார். இருப்பினும், மறைமுகமாக ட்ரம்புக்கு ஆதரவாக அமெரிக்க தொழிலதிபர்களுடன் மஸ்க் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியான நிலையில், கடந்த சனிக்கிழமை ட்ரம்பு மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு பிறகு வெளிப்படையாக மஸ்க் ஆதரவை அறிவித்தார்.

இதையடுத்து, அவருக்கு தேர்தல் வியூகம் வகுக்கும் சூப்பர் பிஏசி நிறுவனத்திடம் 4.5 கோடி டாலர் (இந்திய மதிப்பின்படி ரூ.376 கோழ) நிதி வழங்க உறுதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தவிர, தொழிலதிபர்கள் ஷ ான் மாகுவேர், ஜான் ஹெறிங் ஆகியோர் தலா 5 லட்சம் டாலர்களும், கேமரூன் மற்றும் டைலர் விங்க்லெவோஸ் தலா 2.5 லட்சம் டாலர்களும் ட்ரம்புக்கு நன்கொடை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க உலகின் மிகப்பெரிய அளவில் ஆன வல்லரசு தேசம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.இந்த படுகொலை முயற்சி என்பது பல்வேறு வகையான சந்தேகங்களை ஏற்படுத்த வழி வகை செய்துள்ளது. அமெரிக்க புலனாய்வு பிரிவு மற்றும் சார்பு அமைப்புக்கள் செயல்பாடுகள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்தனை நாட்கள் ஆன பிறகும் சரியான தகவல்களை இல்லாமல் உளவியல் நிபுணர்கள் மற்றும் உளவுத்துறை திணறி வருகிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த படுகொலை சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர் உயிருடன் பிடிக்க முடியாமல் போனது சந்தேகங்களை எழுப்பி வருகின்றது. ஒரு வேளை அவர் உயிருடன் பிடிக்கக்கப்பட்டு இருந்தால் பல்வேறு கேள்விகளுக்கு உண்மையில் விடை கிடைத்து இருக்கும் என்பதே உண்மையாகும். ஆகவே உலகின் எவ்வளவு பெரிய உளவுத்துறை அமைப்பாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட நபரின் ஒப்புதல் வாக்குமூலம் இல்லாமல் எந்தவொரு சாத்தியமான தகவல்களையும் நிச்சயமாக பெற முடியாது என்பதே உண்மையாகும்.

இந்த நிலைமைகளின் கீழ் வதந்திகள் மனிதர்கள் செய்யும் ஒரு சாதாரண விஷயம், ”என்று வாஷிங்டன் பல்கலைக்கழக பேராசிரியர் கேட் ஸ்டார்பேர்ட் கூறினார், அதாவது இணைய தளம் வாயிலாக பல்வேறு போலி தகவல்களுடன் பல்வேறு வகையான தகவல்கள் பரவி வருகிறது என்பதை அவர் உறுதி படுத்தி உள்ளார். எந்தவொரு ஆதாரங்களும் இல்லாமல் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட உடனே இணையதள மூலம் பல்வேறு அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகள் பரவி வருகிறது என்பது தான் உண்மையான நிலையாக இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இதில் பல்வேறு கற்பனை கலந்த அரசியல் சம்பந்தப்பட்ட கதைகளை அமெரிக்கா சமூகம் வடிவமைப்பு செய்ய முனைந்ததாக வாஷிங்டன் பேராசிரியர் முனைவர் ஸ்டார்ட் பேட் தெளிவாக கூறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேநேரத்தில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் வதந்திகள் மற்றும் ஆதாரங்கள் இல்லாத தகவல்கள் அமெரிக்கா அரசியலையும் அதன் வெற்றி தோல்விகளை நிர்ணயம் செய்யும் வாய்ப்புகள் முழுமையாக உள்ளது என்பதே யதார்த்தமான உண்மையாகும். இருப்பினும் ஆசியாவில் நடக்கும் அரசியலில் இருந்து முழுமையாக மாறுபட்ட வலிமை வாய்ந்த ஒரு தேசம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. சக்தி வாய்ந்த புலனாய்வு துறையைச் தன் வசம் வைத்து இருக்கும் அந்த தேசம் உண்மையை கணடறிந்தே ஆக வேண்டும். அரசியல் படுகொலைகள் அல்லது முயற்சிகளுக்கு பின்னர் ஏராளமான கூட்டு சதிகள் இருப்பதே கடந்த காலங்களில் நடந்துள்ள இது போன்ற நிகழ்வுகள் மூலம் நாம் புரிந்து கொண்ட உண்மையாகும்.

வரும் நாட்களில் நடை பெற இருக்கும் அமெரிக்கா குடியரசு தேர்தலில் ஜோ பைடன் மற்றும் ரீ பப்ளிக் ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் மத்தியில் இருக்கும் நிலையில் இந்த முறை பல்வேறு வகையான காரணங்களால் ரீபப்ளிக் கட்சிக்கு சாதகமாகன சூழ்நிலையை உருவாக்கியுள்ளது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதற்கு மிகவும் முக்கியமான காரணியாக உள்ளது ஜோபைடனின் வயது மற்றும் திறனற்ற கொள்கைகள் தான் என்று கூறப்படுகிறது. பாலஸ்தீன பிரச்சினை, ரஷ்யா மற்றும் உக்ரைன் வார், சீன தைவான், வடகொரியா நாட்டுடன் அமெரிக்கா நடந்து கொண்ட விடயங்களில் அமெரிக்கா மக்கள் பெரிதும் கருத்து மாறுபாடுகள் கொண்டுள்ளனர். மேலும் அமெரிக்கா பொருளாதாரம் வலுவிழந்து வருவருதும் அதாவது விலைவாசி உயர்வு மற்றும் பொருளாதார மந்தநிலை மக்களிடையே பேச்சு பொருளாக உருவாகிறது.ஆகவே முழுமையாக ஜனநாயக கட்சி இதன் மூலம் பின்னடைவை சந்திக்கும் நிலை காணப்படுகிறது. முழுமையாக வலதுசாரி பின்னணி கொண்ட ரீபப்ளிக் கட்சிக்கு இது போன்ற காரணிகள் மிக சிறந்த வாய்ப்பை நிச்சயமாக ஏற்படுத்தும்.. அதேநேரத்தில் டொனால்ட் ட்ரம்ப் துப்பாக்கி சூடு ரீபப்ளிக் கட்சிக்கு மேலும் வெற்றி வாய்ப்புகளை அதிகரித்துள்ளது என்பதே தற்போதைய கள நிலவரமாக இருக்கிறது என்பதே உண்மையாகும்.

# ஒரு மில்லியன் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச





ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டமைகிறது. விவசாயம், தொழில் நடவடிக்கைகள் மற்றும் சேவைகளே நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் காரணிகளாகும்.

ஒரு நாடானது தனக்கென உற்பத்தி சுழற்சியைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்தில் ஆடைத் தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு இது முன்னெடுக்கப்பட்டிருந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி பல அம்சங்களில் முன்னெடுக்கப்பட வேண்டும். சேவைகள், சுற்றுலா, விவசாயம், உற்பத்தி போன்ற பல பொருளாதார நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களே அதிக பங்களிப்பை வழங்கி வருவது இப்போது புதிய போக்காக அமைந்து காணப்படுகிறது.

பல்வேறு வேலைவாய்ப்புகளை வழங்கிக் கொண்டு, இவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50மூ க்கும் அதிகமான பங்களிப்பை நல்கி வருகின்றனர். எனவே இதனை கருத்திற் கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஒரு மில்லியன் புதிய தொழில்முயற்சியாண்மைகளையும் தொழில் முனைவோரையும் உருவாக்குவோம்.

மூலதனத்தை வழங்கி, சலுகைகளை வழங்கி, தற்போதுள்ள தொழில்முயற்சியாண்மைகளை பாதுகாத்துக் கொண்டு, மேலும் பல புதிய தொழில்களை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 332 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கம்பஹா, கட்டான, மினுவாங்கொட ஹீனட்யன, தம்மாலோக மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் பழைய தொழில்கள் பாதுகாக்கப்படுவது போல், புதிய தொழில்களும் உருவாக்கப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பம் கற்கும் புதிய தலைமுறையினர், தொழில்முனைவோராக மாறி, தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏற்றுமதியை ஊக்குவிக்கக் கூடிய ஆற்றலை கொண்டவர்களாக மாற்றுவதே ஐக்கிய மக்கள் சக்தியின் கனவாகும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சகல பிரதேச செயலகத்திலும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை உருவாக்குவேன். தகவல் தொழிநுட்பக் கல்வி கட்டாயப் பாடமாக மாற்றப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு




(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கேற்ப ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வானது (18) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பங்கேற்புடன் இடம்பெற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 922 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய உயர்தரத்தினருக்கு செய்முறை கருத்தரங்கு



(எம்.எம். றம்ஸீன்)

அக்கரைப்பற்று கல்வி வலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உயர்தர கணித, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களின் பௌதீகவியல் செய்முறை கருத்தரங்கு ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் அஷ் ஷெய்க் யூ.கே. அப்துர் ரஹீம் (நளிமி) தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இவ்வாரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலையக் கல்விப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம். ரஹ்மத்துல்லா மற்றும் கௌரவ அதிதிகளாக அக்கரைப்பற்று வலைய பிரதிக்கல்விப்பணிப்பாளர்களான எம்.எம்.சித்தி பாத்திமா, பி(ழ்).ஜிஹானா, ஏ.எல்.ஏ.மஜீட், உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.என்.எம்.மஸீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதேவேளை, பாடசாலைக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்ட கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் செய்முறை கூடத்தைத் திறந்து வைத்து பார்வையிட்டதுடன், மாணவர்களின் முயற்சியினையும் பாராட்டினார்.

இந்நிகழ்வின் ஊடாக எதிர்காலத்தில் பாடசாலை மற்றும் பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டம் மேம்படுமென்றும் அதற்காக வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

இப்பகுதிகளில் செய்முறை கருத்தரங்கில் மாணவர்களின் துறைசார்ந்த பரிசோதனைகள் கூடம் அதிதிகளால் திறந்து வைக்கப்பட்டதுடன், ஒவ்வொரு பரிசோதனை முறைகள் தொடர்பாகவும் மாணவர்களால் அதிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# மட்டக்களப்பு கோட்டைக்கு வந்து குவியும் சுற்றுலாப் பயணிகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பில் ஏராளமான சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ள சுற்றுலாத் தளமாக மட்டக்களப்பு கோட்டை விளங்குகின்றது.

வரலாற்றுத் தொன்மை வாய்ந்த விடயங்களில் ஏராளமானவை மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இதுவரை காலமும் இந்தக் கோட்டையினுள் அமைந்திருந்த மட்டக்களப்பு மாவட்ட செயலகம் பிறிதொரு இடத்திற்கு மாற்றப்பட்டதையடுத்து இந்த இடத்தினை சுற்றுலாத் தளமாக மெருகூட்டியுள்ளனர்.

முன்னைய நாட்களிலும் இது ஒரு சுற்றுலாத்தளமாக இருந்தாலும் மக்களினுடைய வருகை என்பது குறைவாகவே காணப்பட்ட நிலையில் தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

இதேவேளை பண்டைய மன்னர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்களை காட்சிப்படுத்துகின்ற நூதனசாலையாகவும் இந்தக் கோட்டை மாற்றம் பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

# அசங்க அபேகுணசேகர கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(ஐ.ஏ. காதிர் கான் )

தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அசங்க அபேகுணசேகர கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அவர் நேற்று (21) காலை கைது செய்யப்பட்டதாக, கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம், அவர் குடிவரவு - குடியல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அசங்க அபேகுணசேகர, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒஸி அபேகுணசேகரவின் புதல்வராவார்.

# உள்ளூர் வளங்களை விற்காத ஒருவரே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்

## - நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு -

(ஐ.ஏ. காதிர் கான்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது தொழிலதிபர் தம்மிக்க பெரேராவோ அல்லது வேறு எவருமோ இதுவரை கட்சிக்கு எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்க்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் யார் போட்டியிடுவது என்பது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே, நாமல் ராஜக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.



சரியான நேரத்தில் வேட்பாளர் நியமிக்கப்படுவார் என்றும், நாட்டின் கடனை அடைக்க உள்ளூர் வளங்களை விற்காத ஒருவரே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் என்றும் நாமல் ராஜபக்க்ஷ கருத்து வெளியிட்டுள்ளார்.

வேட்பாளர்களை எதிர்பார்த்து பலர் கட்சியுடன் கலந்துரையாடி வருவதாகவும், நாமல் ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) **"உதயம்"** இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது. இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com




நாச்சியாதீவு பர்வீன்

முன்னைய வார கட்டுரையின் தொடரச்சி...

பாவேந்தல் பாலமுனை பாறூக்

# உன்னத படைப்புகளால் உயர்ந்து நின்ற படைப்பாளி

## இலக்கியமாமணி அ.ஸ. அப்துஸ்ஸமது

**தொகுப்பு**

முற்றத்து மல்லிகை-1964 (ஈழத்து முஸ்லிம் புலவர் 57பேரின் கவிதை தொகுப்பு நூல்)

பிறைப் பூக்கள் 1979 ஈழத்து (முஸ்லிம் எழுத்தாளர் 27 பேரின் சிறுகதைத் தொகுப்பு-நாலாவது இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு, கொழும்பு)

**பாட நூல்கள்**

இலக்கியப் பொய்கை - 1959,1961

தமிழ் இலக்கியம் விளக்கத் துணை-1968

தமிழ் இலக்கிய வினா விடை-1983 (க.பொ.த. சாதாரணம்)

இஸ்லாம் வழிகாட்டி -1972 (க.பொ.த. சாதாரணம்)

**உரை**

தீன்மாலை-1987 (கஹவத்தை முஹம்மது லெப்பை ஆலிம்.)

“அ.ஸ”, உன்னதமான படைப்புகளால் உயர்ந்து நின்ற படைப்பாளி. அவரின் ஒவ்வொரு படைப்பும் எடுத்துக் காட்டாகச் சொல்லத் தக்கவை. துறை சார்ந்த கனதியுடையதாக மிளிர்பவை.

”தங்கை” என்று அவர் எழுதிய சிறுகதை தனித்துவம் மிக்க முஸ்லிம் சிறுகதையாக திறனாய்வாளர்களால் சுட்டிச் சொல்லப்பட்டது.

மாமியிடம் பால்குடித்த ஒருவர் அவர் பருவ வயதடைந்த பின்னரும் அந்த மாமியின் மகளைத் திருமணம் செய்ய முடியாது என்ற இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தின் அடிப்படையில் அமைந்த சிறுகதை அது. அதன் முக்கியத்துவம் கருதி Brother and Sister என்ற தலைப்பில் சி.வி வேலுப்பிள்ளை அவர்கள் னுயடைல நேறள பத்திரிகையில் அதனை மொழிபெயர்த்திருந்தார்.

அ.ஸ வின் நாவல்களில் பனிமலர், மட்டக்களப்பு பிரதேசத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள்,கலை, கலாசாரம் வாழ்வியல் பேச்சுமொழி என்பவற்றை சித்திரிக்கின்ற நாவலாக முக்கியத்துவம் பெற்றதாகும்.

கனவுப்பூக்கள் நாவலில் பெண்ணியச் சிந்தனைகள் பேசப்படுகின்றன.

”தன் வாழ்வு முழுமைக்கும் ஒரு ஆணையே தஞ்சமெனக் கிடந்து உழல வேண்டியதுதானா? முந்தானையை இடுப்பில் சொருகிக்கொண்டு சமையலறையில் வாழ்நாளில் ஒரு பெரும் பகுதியை கழிக்கும் ஒரு பெண் தன் வாழ்நாளில் காணும் நிறைவு தான் என்ன? அவனுக்கென்று பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்து எஞ்சிய பொழுதையும் கழிக்கும் இந்த வாழ்க்கை ஒப்பந்தம் ஒரு பெண்ணுக்கு வழங்கும் இன்பம் என்ன ?அவளுடைய ஆற்றல், அறிவு, ஆர்வம் அத்தனையும் மழுங்க செய்து எரியும் மெழுகுவர்த்தி மற்றவர்களுக்கு ஒளியை கொடுத்து தன்னை அழித்துக் கொள்ளும் ஒரு நிலையில் பெண் வாழ வேண்டுமா? நான் என்னைக் கலைக்காக அர்ப்பணித்து விட்டேன்.”என்று நாயகி ராணி சொல்வாள் . பெண்ணியம் பேசும் பாத்திரங்களை தந்த நாவலாக இது சிறப்புப் பெற்றிருந்தது..

தர்மங்களாகும் தவறுகள் அன்றிருந்த இன விரிசலையும் மீறிய நட்புறவை எடுத்துரைக்கும் . அதில் வரும் மனைவி மல்காந்தி, தான் தவறிழைக்க வில்லை என்று வாதிடும் வார்த்தைகள், தவறுகள்- தர்மங்கள் பற்றிய மீள் சிந்தனையைத் தூண்டுவன.

”பசித்த ஒருவன் களவெடுத்து உண்டான் என்பதற்காக எந்த ஒரு நீதவானும் அவனை தண்டிப்பதில்லை. அவனை அனுதாபத்தோடு மன்னித்துவிடுவார். நான் செய்தது தவறு என்றால், நான் பெண்ணாய்ப் பிறந்தது தவறு .நான் பிள்ளை பெற்றுக் கொள்ள ஆசைப்பட்டது தவறு. டாக்டரிடம் வைத்தியம் செய்தது தவறு .நீங்கள் ஆண் மலடாகப் பிறந்தது தவறு. ரகுபதியை நீங்கள் வீட்டுக்குள் கூட்டி வந்து பழக விட்டது தவறு. இப்படி எத்தனையோ தவறுகள் இருக்க நான் என் இயற்கை நியதியான மகப்பேற்றை அடையத் துடித்ததில் என்ன தவறு இருக்க முடியும்?.அத்தான் உங்களால் இயலாமல் போன ஒரு பேற்றுக்காக நான் எவ்விதம் குற்றவாளியாகுவேன்” என்று வரும் பகுதி நாவலின் கதையோட்டத்தின் பிரதான பகுதியாக அமைந்தவை.

தர்மங்களாகும் தவறுகள் ஈழத்து நாவல் இலக்கியத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய நாவலாகப் பார்க்கப்பட்டது.

அவரின் இலக்கியக் கட்டுரைகள் தமிழகத்திலும் வரவேற்புப் பெற்றவை.பிறை ,மணிவிளக்கு போன்ற சஞ்சிகைகள் அவற்றை விரும்பிப் பிரசுரித்தன. அவருக்கு ஆ.கா. அப்துஸ்ஸமது போன்ற தமிழக அறிஞர்களின் நட்பைப் பெற்றுத் தந்தவையும் அவையே.

முற்றத்து மல்லிகை, பிறைப்பூக்கள் என்ற அவரின் தொகுப்பு நூல்கள் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆய்வாளர்களால் போற்றப்படுவன. இலக்கிய ஆவணமாக அவை பார்க்கப்படுவதோடு, அ.ஸ. இலக்கிய உலகுக்குச் செய்த தொண்டாகவும் அவை மதிக்கப்படுகின்றன.

தமிழ் இலக்கிய ”ஆ”பாடத்திட்டத்தை கற்ற மாணவர்களும் இஸ்லாம் பாடத்திற்கு பரீட்சைக்குத் தோன்றிய மாணவர்களும் அ.ஸ.வை மறக்கமாட்டார்கள். அவரின் இலக்கிய பாட விளக்கத்துணை, இஸ்லாமிய வழிகாட்டி என்னும் நூல்கள் க. பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமைந்திருந்தன.

அ.ஸ , அங்கதச் சுவையோடு உரை நிகழ்த்தும் இலக்கியப் பேச்சாளர். வானொலியில் 30 உரைகள்,25 நாடகங்கள் என்பவற்றை வழங்கியிருப்பதோடு,இலக்கிய மஞ்சரி என்ற சஞ்சிகை நிகழ்ச்சியையும் நடத்திப் புகழ் பெற்றவர்.

இலக்கியப் பணிக்காக பல பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டார்.

தாஜுல் அதீப் 1989 (முஸ்லிம் சமய கலாசார அமைச்சு)

இலக்கியத்திலகம் 1990 (மலேசிய கவிதை மாலை இயக்கம் )

இலக்கிய மாமணி 1996 (கலைஞர் பேரவை அக்கரைப்பற்று)

1989ல் மல்லிகை அட்டைப்பட அதிதியாக அவரைக் கௌரவித்தது.

அக்கரைப்பற்றில் அப்துஸ்ஸலாம் ஆலீம்- ஆஸியா உம்மா தம்பதியின் மகனாக 07-09-1929 ல் பிறந்த அவர்,களனி வித்தியாலங்காரப் பல்கலைக் கழக பி.ஏ.சிறப்பு பட்டதாரி. ஆசிரியராகவும்,ஆசியர் பயிற்சிக் கலாசாலை தமிழ் விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.மு.மீ றசீனா உம்மாவை விவாகம்(1961) செய்திருந்த அ.ஸ, நான்கு பிள்ளைகளின் (சித்தி றிஜா-எழுத்தாளர்,அஹ்மத் கியாஸ்-எழுத்தாளர்,சித்தி மர்லியா,அஹ்மத் பறாபி)தந்தையாவார். தனது 72வது அகவையில் 01-07-2001ல் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்துகொண்ட இலக்கிய மாமணி அ. ஸ. அப்துஸ்ஸமது இலக்கிய உலகுக்கு அளித்திருக்கின்ற பொக்கிஷங்கள் அநேகம். 75 க்கு மேற்பட்ட சிறுகதைகளை அவர் எழுதியிருக்கின்றார். ஆனால் மிகக் குறைந்த அளவான சிறுகதைகளே ”எனக்கு வயது பதின்மூன்றில் ”இடம் பெற்றிருக்கின்றன். அவருடைய சிறுகதைகள் அனைத்தும் தொகுதியாக்கப்படவேண்டும், அதுபோன்றே அவரின் உருவகக்கதைகள்,கவிதைகள், வானொலி நாடகங்கள் , வானொலி உரைகள், கல்விப்பணி என்பனவும் நூலுருப் பெறவேண்டும். இவையே இலக்கியத் தேடல் உள்ளவர்களின் பேரவாவாக இருக்கின்றது.

இலக்கிய மாமணி என்று புகழ்பூத்திருந்த அ.ஸ. அப்துஸ்ஸமது அவர்கள் மறுமை வாழ்விலும் சிறந்திருக்கப் பிரார்த்தனைகள்

# பங்குகள் ஒருமுகப்படுத்தலுக்காக பங்குதாரர்களின் அனுமதியைப் பெற்றுள்ள அமானா வங்கி

அமானா வங்கியின் ஏற்கனவே காணப்படும் ஒவ்வொரு 10 சாதாரண வாக்குரிமை பங்குகளும், தலா 1 சாதாரண வாக்குரிமை பங்காக ஒருங்கிணைப்பதற்கு பங்குதாரர்களின் அனுமதி கிடைத்துள்ளதாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு அமானா வங்கி அறிவித்துள்ளது. அண்மையில் முன்னெடுக்கப்பட்ட அதிவிசேட பொது ஒன்றுகூடலின் போது இதற்கான விசேட தீர்மானம் ஏகமனதாக எய்தப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்பின் காரணமாக, அமானா வங்கி சாதாரண வாக்குரிமை பங்குகளில், ஏற்கனவே காணப்பட்ட 5,511,257,461 பங்குகளுடன் ஒப்பிடுகையில், 551,125,746 பங்குகள் காணப்படும். ஒருங்கிணைக்கும் செயன்முறை மற்றும் ஊனுளு பதிவுகளை மெருகேற்றும் செயற்பாடுகளுக்காக அமானா வங்கியின் பங்குகளின் பரிவர்த்தனை ஜூலை 8 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டிருக்கும் என்பதுடன், ஜூலை 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கும்.

ஒருங்கிணைப்புக்கான அனுமதி தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், “இந்த ஒருங்கிணைப்புக்கான அனுமதியை வழங்கியமைக்காக எமது பங்குதாரர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். இந்த நகர்வினூடாக பங்கு விலை தளம்பல்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இதர வங்கிகளுடன் ஒப்பீட்டை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும். மேலும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டாளர் விகிதங்களை காண்பிப்பதுடன், சந்தையில் அமானா வங்கியின் பங்குகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைந்திருக்கச் செய்யும்.” - என்றார்.



இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. IsDB குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசிாயடெயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.



# புனாணை தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு

(எம்.ஐ.எம். அஸ்ஹர், எம்.எம். றம்ஸீன்)

புனாணை சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழக பூங்கா அதிமேதகு ஜனாதிபதி ரணின் விக்கிரமசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புழ்ழாஹ்,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷ ாட் பதியுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் அச்சுறுத்தும் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும். – கொத்தலாவல மற்றும் பசுமைப் பல்கலைக்கழகங்களை “பட்டம் விற்கும் கடைகள்” என்று கூறுபவர்கள் கேம்பிரிட்ஜ் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகங்களை ” பட்டங்களை விற்கும் கடைகள் ” என்று கூறுவார்களா?

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்க வேண்டுமானால் பல்கலைக்கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சீர்குலைக்காமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கான காலம் வந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை நேற்று (20) மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டதுடன், மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இதன்போது, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

”1985 இல் ஹிஸ்புல்லாஹ்வை நான் முதன் முதலில் இளைஞர் சேவை மன்றத்தில் சந்தித்தேன். அவர் இன்று இந்த சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துள்ளார். இந்த பல்கலைக்கழகம் நமது பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவைக்கொண்ட மக்களே நமது நாட்டிற்கு அவசியமாகும். அதனால் தான் இந்தப் பல்கலைக்கழகம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது.

நமது நாட்டின் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு மிகவும் நன்றி.

இப்பல்கலைக்கழகத்துடன் தற்போது கிழக்கு மாகாணத்தில் மூன்று பல்கலைக்கழகங்கள் உள்ளன.

இந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் அல்ல. இந்நிறுவனத்திற்கும் கிடைக்கும் நிதி சேமிக்கப்பட்டு, குறித்த நிதி இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கே பயன்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் இலாபம் ஈட்டாத தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளன.

ஹார்வர்ட், ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களை இலாப நோக்கமற்ற பல்கலைக்கழகங்கள் என்று அழைக்கலாம்.

கொத்தலாவல பல்கலைக்கழகம், NSBM பசுமைப் பல்கலைக்கழகம், ளுடுஐஐவு நிறுவனம் போன்றவையும் இலாப நோக்கமற்றவை.

சிலர் இவற்றை பட்டங்களை விற்பனை செய்யும் கடைகள் என்று கூறினர். அப்படியானால், கேம்பிரிட்ஜ், ஹார்வர்ட், ஒக்ஸ்போட் பல்கலைகழகங்களும் பட்டங்களை விற்கும் கடைகளா? அந்த மனப்பான்மையால்தான் இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்கள் வீழ்ச்சியுற்று வருகின்றன.

எனினும், இவற்றை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும்.



அன்று இருந்தது போன்று இன்று பல்கலைக்கழகங்கள் இல்லை. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் ஒரு சர்வாதிகாரத்தைப் போல மாணவர்களைக் கையாளுகின்றன. இத்தகைய சூழலில் கற்பிக்கும் விரிவுரையாளர்களைப் பாராட்டுகிறேன்.

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற்கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது. பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும். நாளை முதல் சமூக வலைதளங்களில் இதனைச் சொல்லி என்னைக் குறை கூறலாம். பல்கலைக்கழகத்தில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும்.

பல்கலைக்கழகத்திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற வேண்டும் – என்றார்.













## மனநலமும் ஆலோசனையும் 40

# மண வாழ்வின் நிறைவேறாத எதிர்பார்ப்புகள்

திருமண பந்தத்தின் அழகான வெற்றி தம்பதிகளின் எதிர்பார்ப்புகள் சரியாக நிறைவேற்றப்படுவதில் தங்கியிருக்கிறது என்று நாம் கடந்த கட்டுரைகளில் இருந்து கற்றுக் கொண்டோம். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாமல் அல்லது நிறைவேற்றப்படாமல் இருக்கும் போது எதிர்பாராத பாதிப்புகள் மண உறவில் உருவாக ஆரம்பிக்கும். அது படிப்படியாக மன அழுத்தத்தை ஏற்படுத்தத் தொடங்கி விடும்.

திருமண உறவில் கணவன் மனைவிக்கு மத்தியில் மன அழுத்தம் உருவாகுவதற்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்று ஒருவர் மற்றவரின் மீது வைத்துள்ள எதிர்பார்ப்புகளுடன் தொடர்புபட்டதாக இருப்பதை காணலாம்.

எதிர்காலத்தில் ஏதாவது நல்லது நடக்கும் என்ற வலுவான நம்பிக்கையே எதிர்பார்ப்பு என்று அழைக்கிறோம். எதிர்பார்ப்புகள் நடக்கும் வரை ஆசையோடு பார்த்துக்கொண்டு இருக்கும் கணவன் மனைவி பலர் இருக்கின்றார்கள்.

எதிர்பார்ப்புகள் நடக்கும் வரை காத்திருந்து ஏமாந்து போனவர்கள் பலரும் இருக்கிறார்கள்.

எதிர்பார்ப்புகள் எதுவும் வேண்டாம், எதிர்பார்ப்பதில் பயனில்லை, கிடைப்பதை வைத்து வாழ்ந்து விட்டுப் போவோம் என்று எதிர்பார்ப்புகளில் நம்பிக்கை இல்லாமல் இருப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கணவன் மனைவி இருவரினதும் எதிர்பார்ப்புகள்

தெளிவற்றதாக இருந்தால்..

ஆரோக்கியமற்றதாக இருந்தால்..

வெளிப்படுத்தப் படாததாக இருந்தால்..

நிறைவு செய்யப்படாததாக இருந்தால்...

ஒருவரால் மற்றவர் புறக்கணிக்கப்பட்டதான மனநிலையை உணர ஆரம்பிக்கலாம். அல்லது திருமண உறவில் விரக்தியை அல்லது ஏமாற்றத்தை அனுபவிக்க ஆரம்பிக்கலாம்.

ஒரு ஆணும் பெண்ணும் முதன்முதலில் திருமணம் செய்துகொள்ளத் தொடங்கும் போது இருவரும் சொல்லப்படாத எதிர்பார்ப்புகளை மனதில் சுமந்தவர்களாகவே திருமண பயணத்தை தொடங்குகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தத்தமது இல்லற வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்ற ஒரு நோக்கம் இருக்கும்.

தங்களின் உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்று தனித்தனியான கருத்துக்களை கொண்டிருப்பார்கள்.

அவர்கள் தங்கள் எதிர்கால குடும்பம் எப்படி இருக்கும் என்று வெவ்வேறான கனவுகளை வைத்திருப்பார்கள்.

தங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றிய வித்தியாசமான யோசனைகளை வைத்திருப்பார்கள்.

இந்த வித்தியாசமான எதிர்பார்ப்புகளை உடனடியாக வெளிப்படுத்த மாட்டார்கள். ஆரம்பத்தில் அவற்றை மௌனத்தின் மூலமே தெரிவித்துக் கொள்வார்கள். ஏனெனில் பெரும்பாலான புதுமணத் தம்பதிகள் தங்கள் துணையுடன் மிகவும் ஒத்திசைந்து இருப்பதாக நம்புவார்கள். எதிர்பார்ப்புகள் சொல்லப்படாவிட்டாலும் அவை ஒன்று போலவே இருக்கும் என்று நினைப்பார்கள்.

ஆனால் கணவன் மனைவி இருவரினதும் எதிர்பார்ப்புகள் ஒன்று போலவே இருக்கும் என்பது எப்போதும் சாத்தியமாக இருக்காது. இருவரும் தனித்துவமான நபர்கள் என்பதாலும், ஆண் பெண் ஏன்ற வேறுபாடுகள் இருப்பதாலும் எதிர்பார்ப்புகளிலும் வித்தியாசங்களும் வேற்றுமைகளும் இருக்கத்தான் செய்யும்.

இரண்டு வெவ்வேறு குடும்பப் பின்னணியில் இருந்து வரும் இரண்டு வெவ்வேறு ஆளுமைகளைக் கொண்ட இருவரும் வெவ்வேறு நபர்கள் என்பதையும்

இருவரும் தனித்துவமான நபர்கள் என்பதையும்

இருவரின் சில எதிர்பார்ப்புகள் வித்தியாசமாக இருக்கும் என்பதையும்

புரிந்து கொள்ள முடியாது போனால் ஆரம்பத்தில் இருந்தே மன உளைச்சலுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

கணவன் மனைவியின் வெவ்வேறான எதிர்பார்ப்புகள் அவசியம் அற்றவையோ கூடாதவையோ அல்ல. திருமண பந்தத்தின் அனைத்து அம்சங்களைப் போலவே, ஒருவருக்கொருவர் தத்தமது தேவைகளைத் தொடர்புகொள்வதற்கும் ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்கும் அன்பை வெளிப்படுத்துவதற்கும் விருப்பங்களை ஆசையோடு முன்வைப்பதற்குமான அழகான சந்தர்ப்பங்களாகவே எதிர்பார்ப்புகள் வெளிவருகின்றன. இதை இருவரும் சரியாக புரிந்து நீ செய் நான் செய் என்ற நிலையில் இருந்து விலகி இருவரும் ஒருவர் மற்றவருக்கு அர்ப்பணிக்கும் நிலைக்கு வரவேண்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்







*அகால மரணம், மற்றும் ஆஸ்பத்திரிகளில் மரணிக்கும் ஜனாஸாக்களை எப்படி துரிதமாக பெற்றுக் கொள்வது மற்றும் வீடுகளில் மரணிக்கும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு முன்னால் என்ன செய்ய வேண்டும் போன்ற விடயங்கள் சம்பந்தமாக கருத்தரங்கு ஒன்று களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (20) மக்கொனை அல்-ஹஸனியா மகா வித்தியால கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா ஜனாஸா சேவைகள் சங்கத்தின் தேசிய தலைவர் தேசகீர்த்தி வைத்தியர் முஸ்னி தலைமையில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் முன்பு கடமையாற்றிய தற்பொழுது பேருவலை சீனன்கோட்டையில் தனியார் வைத்தியசாலையை நடாத்தி வரும் டாக்டர் பஷீர் முஸ்தபாவும் கலந்து சிறப்பித்தார்கள்.* **(பீ.எம். முக்தார்)**

மங்கையொளி

பயாஸா பாஸில்

# உனக்கான பொழுதுகளை நீதான் அனுபவிக்க வேண்டும்



ஒவ்வொரு
காரியத்தின்
போதும் நீ பல
நொண்டிச்
சாட்டுகளை
சொல்கிறாய்.
இன்னும் ஏன் தூ
ங்கிக் கிடக்கிறாய்
உலகம் என்ன
இருண்டு
விட்டதா..!?
காலைச் சேவல்
கூவ மறுக்காத
போது, அக்கினிக்
குஞ்சு உதிக்க மறக்
காத போது,
ஓடும் கடிகாரம்
தன் ஆட்டத்தை
நிறுத்தாத போது,
பூமிப்பந்து சுழல
மறுக்காத
போது,
இரவு விடிந்து
காலையாவது
போல
இன்று போய்
நாளை வா என்பது
போல,
நீ மட்டும் உன்
முயற்சிகளை
கைவிடுதல் இன்பம்
தருமா..!?
தவறவிட்டு
வருந்துவது ே
வேறெந்த முட
தனத்தையும்
என் அறிவுக்
கெட்டியவரையில்
இதுவரை நான்
கண்டதேயில்லை

– பயாஸா பாஸில் –



# விடா முயற்சியே வெற்றிக்கு வழி!

நினைத்த உயரத்தை நினைக்கும் நேரத்தில் அடைந்து கொள்ள எல்லோராலும் முடிவதில்லை. அது மிக்க சவால் மிகுந்தது. வாழ்வின் ஒவ்வொரு தருணமும் பூக்களால் அழகாகப்பட்ட பஞ்சு மெத்தை கிடைக்காது. வாழ்க்கை போராட்டக் களமாகவே அமைந்திருக்கும். அதனை போராடித்தான் ஆக வேண்டும்.

அதுபோன்றுதான், படிக்கும் துறையில் முன்னேற்றம் அடைவதும் இன்றைய காலத்தை பொருத்தமட்டில் பெரும் சிரமமாகவே இருக்கின்றது.

யதார்த்தம் என்னவென்றால், ஆரம்பக் கல்வியைக் கற்று உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் மாணவனோ அல்லது மாணவியோ பல்கலைக்கழக வாய்ப்பு இழந்து விடுகின்றனர். பல்கலைக்கழக வாழ்வை அடைவது என்பது மிகச் சொற்பம். ஏனையவர்கள் தமக்கு விரும்பியவாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர்.

இன்றேல், வருமான வழிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். பல்கலை நுழைந்தவர்கள் தமது படிப்பை முழுமையாக்கிக் கொள்ள பாடுபடுகின்றனர். அவர்களில் சிலர் இடை விலகுகின்றனர். முழுதாக படித்து, பூர்த்தி செய்து, பட்டம் பெற்றாலும் அதற்கேற்ற தொழில் இன்மையால் அவதிப்படுகின்றனர். தனது குறிக்கோளை அடைந்து கொள்ள பெரும் சிரமப்படுகின்றனர். வாழ்க்கை குறிக்கோளாக மாறும் சந்தர்ப்பங்களுமுண்டு.

குறிக்கோள்களை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கும் மனிதன் இடையில் பல சிக்கல், சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பான்.

"ஐயோ.... வேண்டாம் .." என்று தன் துறையை விட்டு வேறு துறைகளில் செல்வோரும் உள்ளனர். "இல்லை அடைந்தே தீருவேன்" என சபதம் கொண்டு வெற்றிக்கொடியை நடுவோரும் இல்லாமலில்லை.

எது எப்படியாயினும் பொறுமையும் பொருளாதாரமும் எல்லா விதத்திலும் தாக்கம் செலுத்துகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

அண்மையில் பத்திரிகையில் ஒரு விடயம் வாசித்தேன். அதனை வாசகர்களாகிய உங்களிடம் பகிர்ந்து கொள்ள நினைக்கின்றேன். தோல்விகளை கண்டு பயப்படாதே என்று இருந்தது அந்த தலைப்பு.

12 முறை பதிப்பகங்களால் நிராகரிக்கப்பட்டு பின்னரே அச்சடிப்பட்ட நூல் தான் ஹெரிபாட்டர். 2018 வரையில் 500 மில்லியனுக்கும் மேற்பட்ட பிரதிகளை விற்பனை செய்து பிரபலமடைந்த ஹாரி பாட்டர் மற்றும் ஜே. கே ரவுலிங் இனை தெரியாதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அவரது விடாமுயற்சியின் பலனே அது.

999 தடவைகள் தோல்வி அடைந்த தோமஸ் அல்வா எடிசன் 1000 ஆவது முறைதான் மின்குமிழைக் கண்டுபிடித்தார். இல்லாவிட்டால் இன்றுவரை நாம் வெளிச்சத்தை பார்த்திருக்கவே முடியாது. 302 தடவை நிராகரிக்கப்பட்ட வோல்ட் டிஸ்னியின் கார்ட்டூன்கள் இன்று வரை சிறர்களால் கொண்டாடப்படுகின்றது இவர்களின் வெற்றிக்கும் சாதனைக்கும் விடாமுயற்சியுடன் செயற்பட்டமையே காரணமாகும்.

எனவே விடாமுயற்சியுடன் செயற்பட்டு வாழ்வை சாதனையாக மாற்றிக் கொள்வோம்....!!

# கடைசி நிமிடத்திலும் தேர்தல் ஒத்திவைப்பு சதி சுப நேரம் பார்க்கும் ஆணைக்குழு

அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்த வேண்டும் என்று சுதந்திரமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக் குழுவுக்கு 2024.07.17 ஆம் திகதி கிடைத்தது. ஏற்கனவே இந்த ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா? நடக்காதா? அரசாங்கம் தேர்தல் நடக்க இடம் விடுமா? ஜனாதிபதி ஜனாதிபதித் தேர்தலை நடத்த சந்தர்ப்பம் வழங்குவாரா? ஜனாதிபதியின் பதவிக்காலம் மேலும் ஒருவருடத்திற்கு நீடிப்பு செய்யப்படுமா? ஏன்றெல்லாம் கேள்விகள் எழுந்து கொண்டிருந்த நிழலையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு 09 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கின்றது. அது தொடர்பாக 2024.07.16 ஆம் திகதி கருத்து தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல். ரத்நாயக்கா இன்னும் இரண்டு வாரங்களில் ஜனாதிபதி தேர்தலுக்காக வேட்பு மனு கோரல், வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கால எல்லை மற்றும் தேர்தல் நடத்தப்படும் திகதி என்பவற்றை அறிவிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

அத்துடன் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் போது சுப முகூர்த்தம் பார்த்தே வேட்புடனு தாக்கல் செய்து வருவதால் வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் எதிர்ப்பு தெரிவிக்க இருப்பதாயின் அதற்காக இரண்டு மணித்தியாளங்களே அவகாசம் கொடுக்கப்படுவதால் நாட்டின் சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து ராஹு காலத்திற்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டி இருக்கின்றது. தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்கின்ற போது விடுமுறை தினம், அரச ஊழியர்களுக்கு பொறுத்தமான நாள், மற்றும் தேர்தலின் பின்னர் மறுநாள் ஓய்வு நாள் ஆக இருக்க வேண்டும் போன்ற விடயங்களை கவனத்தில் எடுத்து நாள் நிர்ணயிக்க வேண்டி இருப்பதால் அதற்காக இரண்டு வாரங்கள் அளவில் செல்லுடம் என்றும் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

அதன்படி ஜனாதிபதித் தேர்தல் நடக்கலாம், தேர்தல் ஆணைக் குழு சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலும் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் உறுதியாகி இருக்கின்றது. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கான காரணிகள் இன்னும் இருந்துகொண்டே இருக்கின்றதையும் நாம் புரம் தள்ளிவிட முடியாது. தேர்தல் நடத்தப்படாமல் இருப்பதற்கு அல்லது பின்போடப்படுவதற்கான சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன.

ஏற்கனவே இந்த ஜனாதிபதித் தேர்தலை நடத்த விடாமல் இருப்பதற்காக அல்லது தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு செய்வதை தடுப்பதற்காக பிரபல வர்த்தகரான சி.டி. லெனாட் என்பவரால் அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனுவொன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு 2024.07.08 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் 05 நீதியரசர்கள் கொண்ட குழாம் மூலம் நிரகரிக்கப்பட்டதோடு மனு தாக்கல் செய்தவருக்கு வழக்கு செலவாக 01 இலட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததோடு ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடம் அல்ல. 05 வருடங்களாகும் என்பதை அரசியல் அமைப்பு மற்றும் ஏற்கனவே அதே உயர் நீதிமன்றம் வழங்கி இருக்கின்ற இரண்டு தீர்ப்புக்களின் அடிப்படையில் உறுதிப் படுத்தியது.

அந்த மனுவைத் தொடர்ந்து இரண்டாவது மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டு ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்வதை தடுக்கும் வகையில் தேர்தல் ஆணைக்கு முவுக்கு இடைக்கால தடை உத்தறவு பிறப்பிக்குமாறு சட்டத்தரணி அருண சிரி உணவடுன என்பவர் மனுவொன்றை தாக்கல் செய்ததிருந்தார். அந்த மனுவிலும் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் 05 வருடங்களாக குறைக்கப்பட்டதாயினும் அரசியல் அமைப்பின் 83 (அ) சொல்கின்றபடி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டாலும் அதற்கான சர்னவாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஜனாதிபதி கையொப்பம் இடாததால் அந்த திருத்தம் முறையாக நிறைவேற்றப் படவில்லை என்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த மனு தொடர்பாகவும் உயர் நீதிமன்றம் 2024.07.08 ஆம் திகதி வழங்கிய அதே தீர்ப்பை மேலும் உறுதி செய்ததோடு மனுவை தாக்கல் செய்தவருக்கு கடுமையாக எச்சரிக்கை செய்து 05 இலட்சம் ரூபா வழக்கு செலவாக செலுத்தவும் உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. நீதிமன்றத்தின் காலத்தை வீனடிக்க வேண்டாடம் என்ற அடிப்படையிலும் நீதிமன்றத்தை தவறான வழிக்கு இட்டுச் செல்ல முயற்சி செய்யப்பட்டது என்ற அடிப்படையிலும் அபராதம் விதிக்கப்பட்டது.

ஆனாலும் இப்போது ஜனாதிபயின் தரப்பில் இருந்து புதிய சவால் விடுக்கப்பட்டி ருக்கின்றது. ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலங்கள் 05 வருடங்கள்தான் என்பதை திட்டவட்டமாக உயர் நீதிமன்றம் 03 தீர்ப்புக்கள் மூலம் அலுத்தமாக தெரிவித்திருந்தும் ஜனாதிபதி அதை அறியாதவராக அல்லது பிடிவாதத்திற்காக மீண்டும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 05 வருடங்கள் என்பதை அரசியல் அமைப்பால் உறுதி செய்யும் வகையில் அரசியல் அமைப்பின் பிரிவு 83 (அ) வுக்கு திருத்தம் ஒன்றை சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்ற தயாராகி இருக்கின்றார். இந்த சட்டமூலத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அமைச்சர வையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளார்.

அதன்படி சட்டமூலம் தொடர்பான அரசாங்க வர்த்தமாணி அறிவித்தல் செய்யப்பட்டு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட இருக்கின்றது. உயர்நீதிமன்றம் அரசியல் அமைப்பிற்கான திருத்தம் தொடாபாக கவனம் செலுத்தி அங்கீகாரம் வழங்கினால் இந்த சட்டமூலத்தை 2024.07.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்தவும் அரச தரப்பு திட்டமிடப்பட்டு வருவதாக அறிய முடிகின்றது. அடுத்த வாரம் பாராளுமன்றம் 23 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதி வரையில் கூட இருக்கின்றது. இந்த விடயத்தால் மீண்டும் குழப்பமான நிலை



ஜனாதிபதிகு பாராளுமன்றத்தில் ஆதரவளிக்கும் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கட்சியானது அதன் ஜனாதிபதி வேட்பாளராக ரனில் விக்கிரமசிங்காவை நியமிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கின்றது. அதன் ஜனாதிபதி வேட்பாளர் பிரபல தொழிலதிபரும் தனவந்தருமான தம்மிக பெரேரா என்பது ஊர்ஜிதமாகி இருக்கின்றது. அதனால் அரச ஆதரவு கட்சியான மஹிந்தவாத கட்சிக்கும் ஐ.தே.க. வுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டி ருக்கின்றது.

இந்த நிலையில் இனிமேல் பாராளுமன்றத்தில் மஹிந்தவாத பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு தேவையான 3%2 பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்து ஜனாதிபதி ரனிலின் ஆசையை நிறைவேற்ற துணை போகுமா என்பதும் சந்தேகத்திற் கிடமானதாகும். அவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக் காமல் ஜனாதிபதியின் சட்டமூலம் தோள்வியடையுமானால் ஜனாதிபதி அடுத்து என்ன செய்வார் என்பது பிரதான கேள்வியாகும். மாற்று வழியாக ஜனாதிபதிக்கு அரசியல் அமைப்பின் பிரகாரம் இருக்கின்ற அதிகாரத்தை பயன்படுத்தி அன்றைய இரவே பாராளுனமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கான அறிவித்தலை செய்ய முயற்சி செய்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரான காமினி வெலபொட தெரிவிக்கையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அன்றைய தினமே பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அரசாங்க வர்த்தமாணி அறிவித்தலை ஜனாதிபதி தயார் செய்து வைத்திருக்கின்றார் என்று உறுதிப்படுத்தி உள்ளார். மறுபுரமாக இந்த சட்ட மூலத்தை சமர்ப்பிக்கின்ற போது 05 வருடமாக குறைப்பது என்ற திருத்திற்கு பதிலாக ஏற்கனவே 19 ஆவது திருத்தம் மூலம் 05 வருடங்கள் என்று இருப்பதால் 05 வருடங்களுக்கு மேல் நீடிப்பது என்ற வரியை உள்ளடக்கி திருத்தமாக சமர்ப்பித்தால் அதற்காக சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி மேலும் ஒரு வருடத்திற்கு ஜனாதிபதி பதவிக்காலத்தை நீடிப்பதற்கு தந்திரே பயாமான முறையில் செயற்படலாம் என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. அப்படியான ஒரு நிலை உருவாகுமானால் 2025 ஆம் ஆண்டு நவம்பர் வரையில் ஜனாதபதித் தேர்தல் நடக்க வாய்ப்பில்லை.

இவ்வாறான சந்தேகம் எழுவதற்கு பிரதான காரணமாக அமைவது ஐ.தே.க. அல்லது புதிதாக அமைய இருக்கின்ற ஐ.தே.மு. கூட்டணி இதுவரையில் தற்போதைய ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவில்லை. அவரை ஐ.தே.க. வின் ஜனாதிபதி அபேட்சகராக அறிவித்தால் ஜனாதிபதி என்ற தோரணையில் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்த முடியாது. ஆனால் ஜனாதிபதி அபேட்சகர் என்று அறிவிக்காமல் மர்மமாக இருக்கின்ற வரையில் ரனிலால் ஜனாதிபதியாக நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி எதையும் செய்ய முடியம். அதே நேரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் 05 என்று மட்டும் திருத்தம் இருக்குமானால் உயர் நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்ற உத்தரவை பிறப்பிக்க முடியாது. அதற்கான தேவை ஏற்படாது.

ஏனெனில் ஜனாநாயக அதிகாரங்களை குறைப்பதாக இருக்குமானால் அல்லது தடை ஏற்படுத்துவதாக இருந்தால் அதனை பாதுகாப்பதற்காக உயர் நீதிமன்றம் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம். அதன் மூலம் மக்களின் ஆணை பெறப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை அறிவிக்கும். ஆனால் ஜனாதிபதியின் அதிகாரத்தை அறு வருடங்களுக்கு மேல் நீடிக்காமல் 05 ஆக குறைக்கின்ற போது ஜனாநாயக உரிமை மேலும் பாதுகாக்கப்பட்டு பலப்படுத்தப் படுகின்றது. அரசியல் அமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் ஜனாநாயக உரிமைகளுக்கு அச்சுறுத்தல் இல்லை. அதனால் 22 ஆவது திருத்த சட்ட மூலத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு அவசியப்படாது.

எவ்வாறாயினும் தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமான முறையில் தேர்தலுக்கான திகதியை நிர்ணயிக்குமாக இருந்தால் மக்களும் அரசியல் கட்சிகளும் எதிர்பார்க்கின்றபடி தேர்தல் நடக்கும். அத்துடன் அரசியல் கட்சிகளின் வேட்பா ளர்கள் ராஹு காலம் பார்க்கலாம், சுப முகூர்த்தம் பார்க்கலாம். ஆனாலும் தேர்தல் ஆணைக்குழுவின் பணி ராஹு காலம் பார்ப்பதல்ல. அது அரசியல் வாதிகளின் வேலை. தேர்தல் ஆணைக்குழு மூட நம்பிக்கைகளின் உறைவிடமா? அவ்வாறு ராஹு கலமும் சுப நேரமும் பார்க்க காத்திருந்து ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியாமல் பின்போடும் நிலை ஏற்படுவதற்காக ஜனாதிபதிக்கு கால அவகாசத்தை ஏற்படுத்தும் வகையில் மக்கள் அனுபவிக்க வேண்டி இருக்கின்ற ஜனாநாயக உரிமை பரிபோக இடமளிக் குமானால் அதற்கு தேர்தல் ஆணையாளர் உட்பட ஒட்டுமொத்த தேர்தல் ஆணைக்குழு பொறுப்புக் கூற வேண்டும். அதனால் அரசியல் அமைப்பிற்கான புதிய 22 ஆவது சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் தேர்தலுக்கான திகதியை குறித்து நடவடிக்கைகளை ஆரம்பித்தே பொறுத்தமானதாகும்.

ஏற்பட்டுள்ள நிலையில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ ஜனாதிபதியின் இந்த விடாப்பிடியான நடத்தைக்கு ஆப்பு வைக்கும் வகையில் தடையை ஏற்படுத்தும் வகையில் முயற்சி எடுத்தாலும் அது சரிவரவில்லை.

அரசியல் அமைப்புக்கான 22 ஆவது திருத்தமாக கொண்டுவரப்பட இருக்கின்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பின் 83 (அ) பிரிவுக்கு திருத்தம் கொண்டு வரும் சட்டமூலம் தொடர்பான அரசாங்க வர்த்தமாணி அறிவித்தலை ஜனாதிபதி தேர்தல் முடியும் வரையில் வெளியிட வேண்டாம் என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நீதி அமைச்சரின் செயலாளருக்கு 2024.07.18 ஆம் திகதி நீதி அமைச்சர் இந்த உத்தரவை வழங்கி இருந்தார். ஆனாலும் ஜனாதிபதி செயலகம் விஜேதாச ராஜபக்ஷவின் உத்தரவைதூசுக்கும் கணக்கெடுக்கவில்லை. 22 ஆவது திருத்தத்திற்கான அரசாங்க வாத்தமாணி அறிவித்தல் 2024.07. 18 ஆம் திகதி வெளியிடப்பட்டது. எவ்வாறாயினும் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலை எந்தவிதமான இடையுறுகளும் இல்லாமல 2024.10. 05 ஆம் திகதி அல்லது 12 ஆம் திகதி நடத்த முடியுமா என்ற கேள்விகள் எழுகின்றன. எதிர்வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படாவிட்டால் ஒக்டோபர் 26 ஆம் திகதி சனிக்கிழமையே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

ஆனாலும் அரசிலமைப்பிற்கான 22 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டால் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஜனாதிபதியின் கையொப்பம் பெற வேண்டும் என்ற உயர் நீதிமன்றம் அறிவித்தால் அதனால் ஜனாதிபதித் தேர்தல் மீண்டும் குழம்பிப் போகும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதியின் பதவிக் காலம் 05 வருடங்கள்தான், 06 அல்ல என்பதை உறுதி செய்யும் வகையில் 03 உயர் நீதிமன்ற அறிவிப்புக்கள் உறுதி செய்திருக்கின்ற நிலையில் அது புரியாமல் வரலாற்று தவறை திருத்த ஜனாதிபதி எடுக்கும் பிரயத்தணத்தில் ஏதோ ஒரு இரகசியம் இருக்கின்றது என்று அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் கருதுகின்றனர். ஒருவேளை இந்த சட்டமூலம் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட பின்னர் அதனை பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அறிவித்தால் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட 30 நாட்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி ஜனாதிபதி சட்ட மூலத்தில் கையொப்பம் இட வேண்டும்.

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் 1000 கோடி ரூபா செலவு செய்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்திவிட்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்த பணம் இல்லை என்ற காரணத்தை காட்டி ஜனாதிபதித் தேர்தலை பின்போட ஜனாதிபதி காய் நகர்த்துகின்றார் என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன. ஜனாதிபதியின் இந்த முயற்சியானது நாடு இருக்கின்ற நிலையில் அநவசியமான பண விரயத்திற்கு வழிவகுப்பதாகும் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அத்துடன் இந்த சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் இப்போது புதிய சிக்கல்கள் எழுந்துள்ளன.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

# உலமா சபையை ஆயுமாகப் பாவிக்கும் முயற்சி

ஞானசார தேரருக்கு பிணை வழங்கப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கொன்று மேன்முறையீடு செய்யப்பட்டால் நியாயமான காரணிகளை முன்வைத்து பிணை கோரினால் பிணை வழங்கப்படுவது சாதாரண விடயம். பிணையில் விடுவிப்பது என்பது குற்றவாளி நிரபராதியாவதல்ல. வழங்கு தொடரும்.

ஞானசாரருக்கு பொது மன்னிப்பை வழங்க வேண்டும் என்று சிறிது காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. பௌத்த குருமாருக்கு சில இயக்கங்களும் இந்தக் கோரிக்கையை விடுத்து வருகின்றனர்.

ஞானசார தேரர் இஸ்லாததை அவமதித்த காரணத்தால் நான்கு வருட கடுமையானச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டனையை அனுபவித்து வந்தவர்.

நாட்டின் நீதிமன்றத்தில் எந்தத் தண்டனை வழங்கப்பட்டாலும் அவ்வாறு தண்டனை அனுபவிப்பவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டு. இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கப்பட்டால் அவர் குற்றம் செய்யாதவராக கருதப்பட்டு அனைத்து உரிமையையும் பெறுவார்.

அண்மைக் காலங்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிக்கா பிரேமசந்திரவின் தந்தையை கொலை செய்த விடயத்தில் மரண விசாரணை தண்டனை விதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு பின் சிறிது காலம் அரச நிறுவனமொன்றின் தலைவராகவும் இருந்தார். வெளிநாட்டு பிரஜையைக் கொன்ற ஒருவரும் ஏழு வருடம் சிறை கைதியையும் அப்போதைய ஜனாதிபதியால் பொது மன்னிப்பில் வெளி வந்தனர். நீதிமன்றத்தை அவமதித்து சிறை சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ. திஸாநாயக்க பொது மன்னப்பில் வெளிவந்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

இந்த ஞானசார தேரர் பிணையில் விடுவிக்கப்பட முன்னரே பொது மன்னிப்பு கோரப்பட்டது. மகாநாயக்க தேரர்களை சந்தித்த பிக்குமார் அமைப்புக்கள் அந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். சில இயக்கங்களும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இது தேர்தல் நெருங்கும் காலம். எனவே, அரசியல் தலைவஉகளுக்கு இரண்டும் கெட்டன் நிலை மன்னிப்பு வழங்கினால் பௌத்த மக்களின் ஆதரவு அதிகரிக்கும். ஆனால் முஸ்லிம்களின் ஆதரவு குறையும். மக்களின் எதிஉப்பை சம்பாதிக்க வேண்டி வரும். மன்னிப்பை வழங்கி பௌத்த மக்களது ஆதரவைப் பெறவும் வேண்டும். முஸ்லிம்களைப் பகைத்துக் கொள்வதும் நட்டம். இது தான் இக்கட்டான நிலை.

இதற்கு ஒரே வழி முஸ்லிம்களை சமாளித்து விடயத்தை முடிப்பது தான் என்று ஆட்சியாளஉகள் நினைக்கின்றனஉ. மன்னிப்பை வழங்குங்கள். நாங்கள் விரும்புகிறோம் என்று முஸ்லிம்கள் கூறவேண்டும். ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதற்கு சில முஸ்லிம்கள் பிரமுகர்களை நாடினஉ. அவஉகள் பயந்து விட்டனஉ. சமூகத்தின் பெயரால் விருப்பம் தெரிவிக்க பயந்து விட்டனர். சமூகத்தின் எதிரிகளாக ஆகிவிடுவோம் என பொதுவாக பந்தை உலமா சபை மீது நகர்த்தி விட்டனர்.

உலமா சபையை உயர்த்தி உச்சியில் வைத்தால் காரியம் ஆகும் என்று நினைத்து உலமா சபையை கெஞ்சத் தொடங்கினர்.

உலமா சபைக்கும் பிரச்சினை. தனியாக முடிவு எடுத்தால் மக்களின் எதிஉப்பை சமாளிக்க முடியாது போய்விடும் என நினைத்து உலமா சபை அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக பிரமுகர்களையும், இயக்க பிரமுகஉகளையும் அழைத்து ஆலோசனை கூட்டம் ஒன்றை கூட்டியது.

அரசியல்வாதிகளும் நழுவிவிட்டனர். இவஉகள் அரசியல் இலாபம் பார்த்தனர். மக்களின் விமர்சனங்களும் அதிகரித்தன. கூட்டமும் சாத்தியமாகவில்லை.

பொது மன்னிப்பு வழங்கும் அதிகாாம் ஜனாதிபதிக்கே உள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிக்காவின் தகப்பன் கொலை விடயத்தில் குற்றவாளியாகிய சில்வாவுக்கு முற்றாக மன்னிப்பு வழங்கப்பட்ட போது குறைந்த பட்சம் பாதிக்கப்பட்ட ஹிருனிக்கா குடும்பத்திடம் கேட்கவில்லை. நீதிமன்றத்தை அவமதித்த எஸ். பீ. திசாநாயக்கவுக்கு மன்னிப்பு வழங்கும் போதும் நீதிபதிகளிடம் கேட்கவில்லை. நீதிமன்றத்தில் கேட்கவும் இல்லை. அவ்வாறாயின் ஞானசார தேரருக்கு மன்னிப்பு வழங்க மாத்திரம் முஸ்லிம்களிடம் அனுமதி பெற வேண்டும்.

காரணம் பௌத்த மக்களின் ஆதரவை அதிகரித்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களே மன்னிப்பு வழங்கும்படி கூறினாஉகள் என்று கூறி முஸ்லிம்களின் ஆதரவை வைத்திருக்கவும் வேண்டும். இவ்வாறு செய்வதால்தான் எதிஉப்பை முஸ்லிம் தலைவஉகள் மீது தினித்து விடலாம். முஸ்லிம்கள் கூறியே மன்னிப்பை வழங்கினோம் என்று நன்மை பெறலாம். தப்பி விடலாம்.

இது போன்ற சூழ்ச்சிகள் இதன் பின்னரும் வரலாம். எனவே, புத்தி சாதுஉயமாக செயல்பட வேண்டும். மன்னிப்பை வழங்குவதும் வழங்காமல் விடுவதும் ஜனாதிபதியின் வேலை. அதை அவரே பாஉத்துக்கொள்ள வேண்டும். சமூகத்தை இதில் மாட்டிவிட்டு தப்பிக் கொள்ள இடமளிக்கக் கூடாது.

கருத்து வெளியிடும் போது நன்கு ஆராய்ந்து ஒருமித்த கருத்தை வெளியிட வேண்டும். முஸ்லிம் விவாக சட்டம் தொடஉபான சட்ட திருத்த ஆலோசனை விடயம் போன்று பிரிந்த பல கருத்துக்களை ஒன்றுக்கொண்டு முரணாக வெளியிட்டால் சமூகத்துக்கு பாதிப்பே வரும்.




அரபாத் பஹூர்தீன்

# பங்களாதேஷ் மகளிரை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் ஆரம்பித்த இலங்கை மகளிர் அணி

9ஆவது ஆசிய மகளிர் ரி20 தொடரின் 4ஆவது லீக் ஆட்டத்தில் சகலதுறையில் பிரகாசித்த இலங்கை மகளிர் அணி 7 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் மகளிர் அணியை வீழ்த்தி தமது புள்ளிக்கணக்கை ஆரம்பித்தது.

ஆசியக் கிண்ண 9ஆவது மகளிர் ரி20 தொடர் இலங்கையின் தம்புள்ள ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இத் தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றிருக்க முதல் லீக் சுற்றுக்காக ஒரு குழுவில் 4 அணிகள் வீதம் இரு குழுக்கள் பிரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய குழு ஏ இல் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

மேலும் குழு பீ இல் இலங்கை, பங்களாதேஷ், தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் நேற்றைய தினம் இரவு 7 மணிக்கு ஆரம்பித்த இலங்கை மகளிர் மற்றும் பங்களாதேஷ் மகளிர் அணிகளுக்கு இடையிலான போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் மகளரி அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பாடிய பங்களாதேஷ் மகளிர் அணிக்கு முன்வரிசை வீரர்கள் நிலைத்து நிற்காமல் விரைவாக ஆட்டமிழந்து ஏமாற்ற மத்திய வரிசையில் வந்த அணித்தலைவி நிஹார் சுல்தானா ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருக்க 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் உடேஷ ிக்கா மற்றும் இனோஷி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் 112 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்கினை நோக்கி பதிலுக்கு களம் நுழைந்த இலங்கை மகளிர் அணிக்கு தலைவியான சமரி அத்தபத்து 12 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொடுத்து ஆட்டமிழந்த போதிலும் மற்றைய ஆரம்ப வீரராங்கனையான விஷ்மி குணரத்த பொறுப்புடன் ஆடி அரைச்சதம் கடந்து 51 ஓட்டங்களையும், 3ஆம் இலக்க வீராங்கனையான ஹர்சித்தா 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 17.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்கலால் மிக இலகு வெற்றியைப் பதிவு செய்ததுடன் 2 புள்ளிகளைப் பெற்று புள்ளிக் கணக்கை ஆரம்பித்தது இலங்கை மகளிர் அணி.




# லூகா மோட்ரிச்சின் ஒப்பந்தத்தை நீடித்தது ரியல் மெட்ரிட்

குரேஷிய அணியின் பிரபல உதைப்பந்தாட்ட வீரரான லூகா மோட்ரிச்சை எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரை ரியல் மெட்ரிட் கழகத்தில் விளையாட ஒப்பந்தத்தை நீட்டிக்கப்பட்டுள்ளது.

ரியல் மெட்ரிட் கழகத்தின் மிட் ஃ பீல்டரான லூகா மோட்ரிச் குரோஷிய அணி கேப்டனாகவும் உள்ளார். குரோஷிய அணி ரஷ்ய உலகக் கிண்ண உதைப்பந்தாட்ட போட்டியில் இரண்டாவது இடம் பெற்றதுடன் ரியல் மெட்ரிட் மூன்றாவது முறையாக சம்பியன்ஸ் லீக் பட்டம் வெல்லவும் காரணமாக இருந்தார்.

மேலும் உலகக் கிண்ண போட்டியில் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதையும் மோட்ரிச் வென்றுள்ளார்.இந்நிலையில் உலகின் மிகச்சிறந்த மிட்ஃபீல்டர் என்ற பெயரை பெற்றுள்ள லூகா மோட்ரிச்சின் ஒப்பந்தத்தை ரியல் மெட்ரிட் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வரை நீட்டித்துள்ளது.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரை அவர் ரியல் மெட்ரிட் அணிக்காக மோட்ரிச்விளையாடவுள்ளார். அத்துடன் இவ்வாண்டிலிருந்து பிரான்ஸின் நட்சத்திர முன்கள வீரரான எம்பாப்பேயும் ரியல் மெட்ரிட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வடமேல் மாகாணத்தின் சம்பியன்களாக மகுடம் சூடி, தேசியத்தில் கால்பதிக்கும் கல்பிட்டி அல் அக்ஸாவின் மைந்தர்கள்

வடமேல் மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உதைப்பந்தாட்டத் தொடரில் கடந்த 19ஆம் திகதி நிறைவுக்கு வந்த 20 வயதுக்குற்பட்டர்களுக்கான இறுதிப் போட்டியில் குருநாகல் மல்லியத்தேவ மொடன் பாடசாலை அணியை வீழ்த்தி வடமேல் மாகாணத்தின் சம்பியன் மகுடத்தினைத் தனதாக்கியதுடன் மீண்டும் தேசிய மட்டப் போட்டிக்கு தன் வரவை உறுதிப்படுத்தியது கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி.

இலங்கை பூராகவும் இடம்பெற்றுவரும் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்களில் வலயமட்டப் போட்டிகளின் முடிவில் தற்சமயம் மாகாண மட்டப் போட்டிகள் ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் வடமேல் மாகாண மட்ட உதைப்பந்தாட்டப் போட்டித் தொடர் கடந்த 16ஆம் திகதி ஆரம்பித்து 19ஆம் திகதி வரை நாரம்பல நகர சபை மைதானம் மற்றும் சியம்பலாகஸ்கொடுவ அல் மதீனா தேசிய பாடசாலை மைதானம் ஆகிய இரண்டிலும் இடம்பெற்றிருந்தது.

அந்தவகையில் ஆண்களுக்கான 20 வயதுக்குற்பட்ட உதைப்பந்தாட்டத் தொடரில் வலய மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெற்றுக் கொண்ட மொத்தம் 24 பாடசாலை அணிகள் இம் மாகாண மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன. அதற்கமைய புத்தளம் வலயத்தின் சம்பியன்களான கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி முதல் சுற்றின் முதல் போட்டி பையுடன் இரண்டாம் சுற்றுக்குத் தகுதி பெற்றனர். பின்னர் 2ஆது சுற்றும் பை முறையில் காலிறுதி ஆட்டத்தில் பங்கேற்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர்.

அதற்கமைய காலிறுதி ஆட்டத்தில் கெகுனுகொல்ல தேசிய பாடசாலை அணியை போராடி வீழ்த்திய அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி அரையிறுதி வாய்ப்பை உறுதிப்படுத்தியது. பின்னர் முதல் அரையிறுதி ஆட்டத்தில் வடமேல் மாகாணத்தின் பலமிக்க அணியாகப் பார்க்கப்படும் குருநாகல் மலியதேவ கல்லூரியை எதிர்த்தாடியது. விறுவிறுப்புக்குப் பஞ்சமின்றி இடம்பெற்ற இப்போட்டி இரு அணிகளாலும் கோல் ஒன்றினைக் கூட உட்செலுத்த முடியாமல் போக கோலின்றி சமநிலை பெற்றது. பின்னர் வெற்றியாளரை தீர்மானிக்க பெனால்ட்டி உதை வழங்கப்பட அதில் 4:3 என்ற பெனால்ட்டி உதைகள் அடிப்படையில் வெற்றி பெற்ற கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி இறுதிப்போட்டிக்குள் தடம்பதித்தது.

இந்நிலையில் மற்றைய அரையிறுதிப் போட்டியில் மாதம்பை அல் மிஸ்பா தேசிய பாடசாலை அணியை வீழ்த்திய குருநாகல் மல்லியத்தேவ மொடன் கல்லூரி அணி தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் பலமிக்க அல் அக்ஸ ாவை எதிர்கொள்ளத் தகுதி பெற்றது.

இதற்கமைய நாரப்பல நகர சபை மைதானத்தில் இன்று மாலை ஆரம்பித்த இறுதிப் போட்டியில் சம பலமிக்க இரு அணிகளும் பலப்பரீட்சை நடாத்தின. இப் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் முதல் கோலுக்காக மிகுந்த பிரயத்தனம் மேற்கொண்டனர். இதன் விளைவாக முதல் பாதியில் குருநாகல் மலியதேவ மொடன் கல்லூரி முதல் கோலை பதிவு செய்து முதல் பாதியை 1:0 என தமது ஆதிக்கத்ததுடன் நிறைவு செய்தது.

பின்னர் ஆரம்பித்த தீர்க்கமான 2ஆது பாதி ஆட்டத்தில் பதில் கோல் அடிக்கும் முனைப்பில் அல் அக்ஸா தேசிய பாடசாலை வீரர்கள் தீவிரம் காட்ட அதை தடுத்தாடிய மல்லியதேவ மொடன் கல்லூ ரி மாணவர்கள் ஒரு கட்டத்தில் விதிமுறைகளுக்கு அப்பால் பந்தினைத் தடுத்தாட நடுவர் அதை உற்றுநோக்கி அல் அக்ஸ ா தேசிய பாடசாலை அணிக்கு பெனால்ட்டி வாய்ப்பைக் கொடுக்க அதனை கோலாக மாற்ற போட்டி 1:1 என சமனானது. போட்டியின் முழு நேர ஆட்டமும் அதே கோல் கணக்குடன் நிறைவுக்கு வர வடமேல் மாகாணத்தின் சம்பியனைத் தீர்மானிக்க பெனால்ட்டி உதை வழங்கப்பட்டது.

இதில் கல்பிட்டி அல் அக்ஸ ா தேசிய பாடசாலை அணி 4 கோல்களை உட்செலுத்த , பலமிக்க குருநாகல் மலியத்தேவ மொடன் கல்லூரி அணி 3 கோல்களை மாத்திரம் கம்பம் அனுப்ப 4:3 என்ற பெனால்ட்டி கோல்களின் அடிப்படையில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி ஆண்களுக்கான 20 யதுக்குட்பட்ட உதைப்பந்தபாட்டத்தின் சம்பியன்கள் மகுடத்தினைத் தனதாக்கியதுடன் மீண்டும் தேசிய மட்டப் போட்டிகளுக்கு தமது வரவை உறுதிப்படுத்தி அசத்தினர்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.